விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 20 ஞாயிற்றுக்கிழமை (04.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஆராய த.தே.கூட்டமைப்பு இன்று இந். பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றது. இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்குச் செல்ல இருப்பதாக அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்தியாவில் சந்திக்கவுள்ளவர்கள் மற்றும் கலந்துரையாடப்படவுள்ள விடயங்கள் குறித்து எதுவும் கூற முடியாதிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா யாரை சந்திக்கக் கூறுகிறதோ அவர்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்திக்கவுள்ளனர். இந்தியாவுக்கான விஜயத்தை இன்று ஆரம்பிக்கவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கு நான்கு நாள்கள் தங்கியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி உள்ளிட்ட பலரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்திப்பர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதற்கிடையில் ஏற்கனவே வெளியான செய்திகளின் அடிப்படையில், தமிழர் பிரச்சினை தொடர்பிலான தீர்வுத் திட்டம் ஒன்றை இந்திய அரசாங்கம் தீர்மானித்து வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தீர்மானம் அண்மையில் ஜனாதிபதி இந்தியா சென்றபோது, அவருடன் பேசப்பட்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அடிப்படையில் இந்தத் தீர்மானம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்டு அதனை ஏற்றுக் கொள்ள வலியுறுத்தப்படலாம் என (20 ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியை முதலமைச்சராக்க அரசாங்கம் முயற்சி செய்கிறது

### நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகா

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் என அழைக்கப்பட்ட கே.பியை (குமரன் பத்மநாதன்) வட மாகாண முதலமைச்சராக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என ஜனநாயக தேசிய கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கே.பியைக் கைது செய்த விதம் பற்றிக் குறிப்பிட்டால் அரச பாதுகாப்பு இரகசியங்களை வெளியிட்டதாக என் மீது குற்றஞ்சுமத்துவார்கள் என்பதனால் அதனைக் கூற நான் விரும்பவில்லை. (20 ஆம் பக்கம் பார்க்க)

## வ.செ.திட்ட இரண்டாம் வாசிப்பு 63 வாக்குகளால் நிறைவேறியது

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் 63 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு ஆதரவாக 138 வாக்குகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. 75 வாக்குகள் மாத்திரமே எதிராக அளிக்கப்பட்டிருந்தன. 11 பேர் வாக்களிக்கவில்லை.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிராக வாக்களித்தன. இம்முறை நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் கூறப்பட்டு வாக்களிப்பு இடம்பெற்றது.

எவ்வாறாயினும் வாக்களிப்பு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு- (20 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.நிபுணர் குழு நியமனம் இந்தியாவுக்கும் மனக்கசப்பு

## நிபுணர் குழு கருத்துக் கேட்பதற்கும் எதிர்ப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆலோசனை பெறுவதற்கு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்துள்ள நிபுணர்கள் குழு இலங்கை அரசாங்கத்தின் உயரதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடம் கருத்துக்களைக் கேட்டறிய மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளவுள்ளதாகத் தூதரகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசு ஐ.நாவிடம் மன்னிப்புக் கேட்கக் கூடும்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் மன்னிப்புக் கோரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளையை முற்றுகையிட்டு, அதன் பணியாளர்களை வீட்டுக் காவலில் வைக்க வேண்டும் என வீடமைப்பு மற்றும் பொறியியல் அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் அரசாங்கம் மன்னிப்புக் கோரலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் மன்னிப்புக் கோரக் கூடிய சாத்தியம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பேச்சாளர் சரா ஹக் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சாள்ஸ் விஜயவர்த்தன கொலை சந்தேகநபர் தொடர்ந்து காவலில்

(கொழும்பு)

போர் நிறுத்த காலத்தில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜயவர்த்தன கொலையுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலி சந்தேக நபரைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரைக் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

முன்வைக்கப்பட்ட வாதங்களைக் கவனத்தில் கொண்ட நீதவான் சந்தேக நபரை 30 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள முகாம் ஒன்றில் தங்கியிருந்த நிலையில் தமக்குக் கிடைத்த தகவல்களையடுத்து சந்தேக நபர் கைது (20 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் சட்ட ஆலோசகர் பதவி நாடாளுமன்ற உறுப்பினர் நாமலுக்கு?

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் சட்ட ஆலோசகர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்க அரசாங்கம் தயாராகியுள்ளது.

இன்னும் சட்டக் கல்லூரியில் பயின்று வரும் நாமல் ராஜபக்ஷ, சட்டத் தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளாத நிலையில் அவருக்கு இவ்வாறான பதவிகளை வழங்குவது சட்டவிரோதமானது எனச் சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாமல் ராஜபக்ஷ கடற்படையின் சட்ட ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளதால் கடற்படையின் சிரேஷ்ட சட்ட ஆலோசகர்கள் அதிருப்தியடைந்துள்ளதாக அதன் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இது குறித்து கடற்படைப் பேச்சாளர் அத்துல செனரத்திடம் கேட்ட போது, (20 ஆம் பக்கம் பார்க்க)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் யாழ்ப்பாண விஜயம் பிற்போடப்பட்டுள்ளதால் யாழ். வேலையற்ற பட்டதாரிகளுடனான இன்றைய சந்திப்பு இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சருடனான கலந்துரையாடலுக்காக யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளை இன்று காலை 9 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் ஒன்று கூடுமாறு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# வெளிநாட்டு அமைச்சர்கள் இலங்கைக்கு நல்லெண்ண நோக்கில் விஜயம் செய்யவில்லை

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு அண்மைக்காலமாக விஜயம் செய்த வெளிநாட்டு அமைச்சர்கள் நல்லெண்ண நோக்கில் வரவில்லை என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரவுசெலவுத்திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும்.

அண்மைக்காலமாக இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு அமைச்சர்கள் நல்லெண்ண நோக்கில் விஜயங்களை மேற்கொள்ளவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளை பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு அநேகமான வெளி நாட்டு இராஜதந்திரிகள் விஜயம் செய்தனர்.

மனித உரிமைகள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-5)

# இருபது-20 கிரிக்கெட் தொடர் பதிவு செய்யுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகமும் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கமும் இணைந்து யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் இருபது-20 வன்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை முதல் நடத்தவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பப்படிவங்களை யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளர் நிசாந்தனிடம் பெற்று எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விளக்கக் கூட்டமும் பத்திரிகையாளர் சந்திப்பும் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

போட்டிகள் நடைபெறும் இடங்கள் மற்றும் சந்திப்பு நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். மாவட்டத் துடுப்பாட்ட சங்கம் தெரிவித்துள்ளது. (5)




ஸ்ரீ ஸ்ரீ மஞ்சுநாதா ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

தனஞ்செயன் சாஸ்திரி

077 0366383

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

K.R.V. INN

252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(நல்லூர் கோயில் முன்பாக)

(1802)

கைரேகை பார்க்கும் நேரம்:

காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்க்கப்படும்.



ஆதிபராசக்தியின் அருளும் ஆசியும் பரிபூரணமாக அடைவதற்கு யாழ்ப்பாணத்தில் வாழும் பக்தகோடிகளுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்





தென் இந்தியா தமிழகத்தில் மிகவும் பிரசித்திபெற்ற சமயபுரம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மனின் அருளும் ஆசியும் பெற்று கடந்த 25 ஆண்டுகளாக தமிழக பக்தகோடிகளின் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் ஏற்பட்ட சகல குறைகளையும் தீர்த்து பக்த கோடிகளின் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் சகல சுபீட்சங்களையும் ஐஸ்வரியங்களையும் ஏற்படுத்தி பக்த கோடிகளிடையே அழியாத பேரும் புகழும் பெற்று தெய்வமாக ஜோதிக்குள் ஐக்கியமாகி மறைந்த அருள்வாக்கு ஸ்ரீலஸ்ரீ எஸ்.பகவதி அம்மையாரின் குமாரரும் பரம்பரை அருள்வாக்கு தொழில் வாரிசும் ஆகிய, தேவி உபாசகர் தவத்திரு எஸ்.செல்லம் அருள்தாஸ் சாஸ்திரிகள் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு முதல்முறையாக வருகை தந்துள்ளார். சிலதினங்கள் மட்டுமே தங்குவார்கள். தங்கள் ஜாதகம், கைரேகை இரண்டும் இல்லாமல் ஸ்ரீமுத்துமாரி அம்மன் அருளால் தங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலுமுள்ள நன்மை தீமைகளைத் தெரிந்து கொள்ளவும் எதிர்காலத்தைப்பற்றி அறிந்துகொள்ளவும் தாங்கள் நியாயமாக நினைத்த காரியங்கள் வெற்றியடையவும், திருமணத்தில் தடைகள் உள்ள ஆண்களும் பெண்களும் திருமணமாகி பலஆண்டுகள் சென்றும் குழந்தைப் பாக்யம் இல்லாதவர்களும், செய்யும் தொழில் மந்தம் மற்றும் தங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலுமுள்ள சகல பிரச்சினைகளுக்கும் சாஸ்திரிகளை நேரில் சந்தித்து அம்மனின் அருளும் ஆசியும் பெற்று தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் வாழ்க்கையில் சகல சௌபாக்யங்களும் நன்மைகளும் அடையுங்கள். சாஸ்திரிகளைச் சந்திக்குமிடம்

ஹரிஸ் இன்.

175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0777067687

(1108)



வாழ்த்துகின்றோம்

இலங்கை மத்திய வங்கியின்

வட பிராந்திய அலுவலகம்

யாழ்ப்பாணத்தில் இன்று

உதயமாவதனையிட்டு

பெரு மகிழ்ச்சியடைவதுடன்

மக்களிற்கான சேவைகள் சிறப்புற

வாழ்த்துகின்றோம்

DFCC BANK

DFCC Vardhana Bank







செல்லா சினிமா(நாதன்ஸ்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

(C-588)



காணி விற்பனை

சாஸ்திரியார்லேனில் அமைந்துள்ள வீடும் + கிணறும் அடங்கிய 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு கொள்ள வேண்டிய இல: 078 9130329

(1801)



மணமகன் தேவை

UK Citizen (MSc) 01.07.1973 இல் பிறந்த, சதய நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி மணமகளுக்கும் Canada Citizen (B.Com) 30 வயது, பரணி நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற Toronto வங்கியில் கடமையாற்றும் பட்டதாரி மணமகளுக்கு தகுந்த பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு :-

T.P.: No :- 00447508295863

00447904535905

Fax: 00442086720673 (U.K)

E-Mail:ayngaran28@yahoo.couk

(C-596)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் இரண்டாவது தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள மானிப்பாயின் மைந்தன் வணக்கத்துக்குரிய

அன்னப்பா ஜெயக்குமாரன்

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திருச்சபையினை சகல ஆளுமைகளோடும், இறைச் சித்தம் நோக்கி வழிநடத்த எல்லாம் வல்ல இறைவன் வல்லமையாய் பயன்படுத்துவாராக.

(இன்று மானிப்பாய் அ.இ.மி.திருச்சபையில் வரவேற்பு நிகழ்வு காலை 8.30மணிக்கு இடம்பெறும்.)

மானிப்பாய்

அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையினர்

(1803)



AkzoNobel
Tomorrow's Answers Today

Our Company is the market leader in Paints with a strong reputation in the local Paints industry. We are a part of a leading multinational company. The company markets a comprehensive range of decorative, vehicle refinish (automotive) and industrial paints. The brands 'Dulux', 'Glidden' are household names and widely associated with quality, consistency and a strong culture of innovation.

As a part of our future plans we are seeking dynamic, self motivated and result oriented individual, who can make a tangible contribution to our business, to join our sales team.

AREA SALES EXECUTIVE

Area Sales Executive will be based in Jaffna covering Jaffna and killinochchi districts and will be responsible for the following

- Achieving sales & distribution goals
- Merchandising
- Developing customer relationships
- Enhancing the retail environment

Profile of the ideal candidate

- Posses over 4 years experience in sales in Paint, Hardware or FMCG industries
- G.C.E.A/L qualified with credits in Maths & English at G.C.E.O/L
- 25 - 32 years of age
- Good communication skills in Tamil and English. Ability to converse in Sinhalese will be an added advantage.
- IT Literate
- Results orientsd, outgoing, disciplined, physically fit
- Possess driving /riding license

If you believe you could handle this challenge, please send in a detailed resume with names of two non related referees and contact telephone numbers to reach this office within 10 days.

The General Manager
Akzo Nobel Paints Lanka(Pvt) Ltd
199, Kew Road, Colombo -2

(C-598)



குருக்கள் தேவை

அம்மன் கோவில் ஒன்றிற்கு குருக்களும் உதவி ஐயரும் தேவை.

தொடர்பு இல:

078 9130329

(1801)



ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் UK Citizen 28 வயது, 32 வயது, 35 வயது, 37 வயது, Canada Citizen 30 வயது, 32 வயது, 36 வயது, France Citizen 30 வயது, 37 வயது, Australia Citizen 34 வயது மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புக்கு :-

T.P.: No : 00447508295863

00447904535905

Fax: 00442086720673 (U.K)

மணமகன் தேவை

எங்களிடம் UK Citizen 28வயது, 31 வயது, 37 வயது, Canada Citizen 26 வயது, 29 வயது, 32 வயது, Swiss Citizen 22வயது, 24வயது, மணமகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புக்கு :-

T.P.: No : 00447508295863

00447904535905

Fax: 00442086720673 (U.K)

(C-596)



# மத்திய வங்கி யாழ்ப்பாணத்தில் கால் பதிக்கிறது

இலங்கை மத்திய வங்கியின் நான்காவது
மாகாண அலுவலகம் 2010 யூலை 4ஆம் நாளான

**இன்று**

மு.ப. 10 மணிக்கு திறந்து வைக்கப்படுகிறது




மாகாண அலுவலகம்

- உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதுடன் குறைந்த வருமானம் பெறும் தொகுதியினரின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கான, குறிப்பாக வேளாண்மை, விலங்குவளர்ப்பு, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் மற்றும் சுய வேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களில் கவனஞ் செலுத்தி மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்களையும் மேம்படுத்தும். இக் கடன்கள் சலுகை வீதங்களில் வழங்கப்படுவதுடன் மத்திய வங்கியால் மீள்நிதியிடப்படுகிறது.
- முதலீட்டாளர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதி தொடர்பான அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும்.
- சமூக பொருளாதார அளவீடுகளை நடத்தும்
- பொருளாதார அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாடு தொடர்பான விடயங்களில் அரசு மற்றும் தனியார்துறை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படும்.

**வடக்கிற்கு சுபீட்சத்தைக் கொண்டு வருவதற்கு பங்காளியாக இருக்குமாறு வட மாகாணத்திலுள்ள மக்களை மத்திய வங்கி அழைக்கிறது**

இலங்கை மத்திய வங்கி
வட மாகாண அலுவலகம்
இல. 105, அரசடி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 2221855-57

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# கைத்தொலைபேசியில் ஆபாசப்படங்கள் வைத்திருந்தோருக்கு சிறையும் அபராதமும்

(கரவெட்டி)

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் தமது கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படங்களை பதிவு செய்து, வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் நெல்லியடி பொலிஸாரினால் கடந்த மாதம் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மறுநாள் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரித்த நீதவான் குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் இருவருக்கும் தலா 10 ஆயிரம் அபராதமும் இதைக் செலுத்தத் தவறின், 3 மாத சாதாரண சிறைத்தண்டனையை வழங்கியதுடன், மன்றினால் கையடக்கத் தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டு அரச உடைமை யாக்கப்பட்டது எனத் தீர்ப்பளித்தார். (6-24)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ராஜேஸ்வரி நந்தகுமார் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். மேலும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவிகள், நலன்விரும்பிகள் ஆகியோரை சமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது. (6-19)

## பொங்கல் திருவிழா

(சாவகச்சேரி)

வரணி மாசேரி திருவருள் மிகு புராதன குருநாதர் கோவில் வருடாந்த மகா பொங்கல் (வேள்வித்) திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

முன்னோரது பாரம்பரிய மரபு முறைப்படி நடைபெறும் இம்மகா பொங்கல் திருவிழாவில் மீசாலை கிழக்கு அருள்மிகு சித்திரவேலாயுதர் தேவஸ்தான மற்றும் மட்டுவில் மத்தி ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பஜனைக் குழு வினரின் விசேட பஜனைகள் நடைபெறவுள்ளது. (6-29)

## வாரம் ஒரு தகவல்

### இப்படியும் நடக்கலாம்

"என்ன சேர் இது, பின்னோக்கி நடந்து போய்க் கொண்டிருக்கிறீர்கள்?"

இது ஒரு பயிற்சி சேர். எல்லோராலும் இப்படி இவ்வளவு வேகமாக நடக்க முடியாது தெரியுமா?

" பறவைகளால் கூட பின்னோக்கிப் பறக்க முடியாது என்று சொல்கிறார்களே"

" உண்மைதான். இருந்தாலும் ரீங்காரச்சிட்டு (Humming bird) பின்னோக்கிப் பறக்கும்."

"அப்படியா?"

" ஆமாம். மற்றப் பறவையெல்லாம் எதிரில் ஏதாவது ஆபத்து வந்தால் வளைந்து திரும்பித்தான் பறந்து போகும்.

ஆனால் இந்தச்சிட்டு, ஆபத்து நேரத்தில் பின்னோக்கிப் பறக்கத் தொடங்கி சிறிது நேரத்தில் சின்னக் கரணம் அடித்து எதிர்த்திசையில் பறந்து தப்பித்துக் கொள்ளும்."

"இந்தப் பறவையால் மட்டும் எப்படி முடிகிறது?" இறக்கைகளின் அமைப்பு அவ்வாறு அமைந்திருக்கிறது.

இதன் இறக்கைகளின் மூட்டுகள் ஒரு குழியில் பந்து போன்று 360 பாகை கோணத்தில் சுற்றக் கூடியவாறு அமைந்திருக்கிறது.

அது தான் காரணம். பறவைகளிலேயே மிகவும் சிறியது இதுதான்.

இறக்கைகளை மிகவேகமாக அசைக்கக் கூடிய பறவையும் இதுதான். ஒரு விநாடிக்கு 50 முதல் 70 தடவை அசைக்கும்."

" எல்லாம் சரிதான். இருந்தாலும் எல்லோரும் முன்னோக்கி நடக்கிற இந்த வீதியில் நீங்கள் மட்டும் பின்னோக்கி நடந்து கொண்டிருந்தால் பார்க்கிறவர்கள் சிரிக்க மாட்டார்களா?"

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. சனங்கள் எப்பொழுதுமே அப்படித்தான். நேற்றுக் கூட இதே இடத்தில் வாழைப்பழத் தோல் வழுக்கி ஒருத்தன் விழுந்து விட்டான். எல்லோரும் சிரித்தார்கள். நான் மட்டும் சிரிக்கவில்லை"

"ஏன்"

"விழுந்தவனே நான்தானே"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பொதுக்கூட்டம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.171, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் சோ.க. தம்பிப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2009 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை, நிதியறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் சமீபத்தில் மீளப்பெறப்பட்ட உருத்திரபுரம் காந்தி நிலையத்தை நிர்வகிக்க மூவர் கொண்ட குழுவும் நியமிக்கப்படவுள்ளது. இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கக் காரியதரிசி தெரிவித்துள்ளார். (6)

## விசேட கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் லயன்ஸ் கழக தலைவர், அங்கத்தலைவர்களுக்கான 2010-2011 ஆம் ஆண்டிற்கான விசேட கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக 2 ஆவது துணை மாவட்ட ஆளுனர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா கலந்து கொள்வதுடன் கௌவர விருந்தினர்களாக வடக்கு பிரதி சபை செயலாளர் லயன் பி.ஸ்ரீ விமலேஸ்வரன், வடக்கு பிரதி சபை பொருளாளர் வ.ஸ்ரீபிரகாஷ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் பலர் புதிய அங்கத்தவர்களாக இணையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-10)

## மஹோற்சவம்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வேட்டை, சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர் உற்சவமும் 25 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெற்று மறுநாள் இளைஞர் உற்சவமும் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவ காலப் பகுதியில் நவசக்தி அர்ச்சனை, திரு விளக்குப் பூசை, திருமாங்கல்யப் பூசை, வசந்தோற்சவம் என்பனவும் இடம்பெறவுள்ளது. (6-10)

## பழைமை வாய்ந்த இடங்களை தரிசிக்கும் சுற்றுலா பயணிகள்

வட பகுதிக்கு வருகின்ற தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் யாழ். மாவட்டத்தில் பழைமை வாய்ந்த நிலாவரை சூத்திரக் கிணறைப் பார்ப்பதில் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இக்கிணற்றைப் பார்க்க நாளொன்றுக்கு ஆயிரத்துக்குமேற்பட்ட பயணிகள்தினமும்வருகின்றனர்.

இவர்கள் இக்கிணற்றைப் பார்ப்பதும் படம் எடுப்பதும் கிணற்றின் வரலாற்றை அறிவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (6-10)

## இராசி பலன்

04.07.2010
(ஆனி 20, ஞாயிற்றுக்கிழமை)
அட்டமி முழுவதும்
உத்தரட்டாதி பிற்பகல் 2.39 மணிவரை
இராகுகாலம் 4.27-5.57 மணிவரை
சுபநேரம் 8.57.10.27 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் வருகை, சயனசுகக் குறைவு. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், கலந்துரையாடல், போசன சுகம், தேகநலன். |
| மிதுனம் | அதிகாரம், தொழில் சிந்தை, சுபநிகழ்வு, முயற்சி கைகூடும். |
| கடகம் | பெரியோர் சந்திப்பு, பிரயாண நன்மை, அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | பிறருக்கு உதவி செய்தல், தொழில் சிந்தை, போசன சுகம், பிரயாண பயம். |
| கன்னி | குடும்ப மகிழ்ச்சி, நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும், தனவருவாய். |
| துலாம் | ஆரோக்கியமான நிலை, காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| விருச்சிகம் | தனவிரயம், அமைதிக் குறைவு, போசன சுகக் குறைவு, தெய்வ சிந்தை. |
| தனுசு | சுபநிகழ்வு, மனச்சஞ்சலம், தொழில்சிந்தை, உறவினர் சந்திப்பு. |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி, போசன சுகம், பிரயாண நன்மை. |
| கும்பம் | மனச்சஞ்சலம், சுபசெலவு, முயற்சி தாமதம், போசன சுகக் குறைவு. |
| மீனம் | தெய்வசிந்தை, உறவினர் சந்திப்பு, முயற்சி கைக்கூடும், வெகுமானம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 150 |
| தக்காளி | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 160 | 150 | 130 |
| பூசனி | 40 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 50 | 80 | 70 |
| பாகற்காய் | 120 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 80 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 120 | 150 |
| பீற்றூட் | 70 | 100 | 90 |
| கறிமிளகாய் | 120 | 120 | 130 |
| முருங்கைக்காய் | 160 | 250 | 250 |
| போஞ்சி | 100 | 100 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

# முல்லைத்தீவில் இராணுவ முகாம் அமைப்பது அனர்த்தம் ஏற்படுவதற்கு வழிகோலும்

## த.வி.கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கருத்து

முல்லைத்தீவில் முன்னோடியாக இரா ணுவ முகாம் அமைப்பதையும் இராணுவத்தி னருக்கு வடக்கு-கிழக்கில் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுப்பதாக அரசு எடுத்த முடி வையும் இன்றைய சூழ்நிலைக்கு ஒவ்வாது எனவும், எதிர்பார்த்த விளைவைக் கொடுக் காது எனவும், விரைவில் ஓர் அனர்த்தத்திற்கு வழிகோலும் எனவும் வெளிப்படையாக எனது கருத்தை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இவ்வாறு தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இந்த முடிவை புத்திசாதுரியமற்ற முறை யில் நான் ஆட்சேபித்து குழவிக் கூட்டுக்கு கல்லெறிந்தவன் போன்ற நிலைக்கு ஆளாக மாட்டேன். நான் எதைச் சென்னாலும் எதைச் செய்தாலும் தேசப்பற்றுடனேயே நோக்கு வேன். அரசு உடனடியாக இவ்விரு நடவடிக் கைகளையும் நிறுத்தி ஏற்கனவே திறக்கப் பட்ட இராணுவ முகாமை மூடி புதிதாக இரா ணுவ முகாம் எதையும் திறக்க வேண்டாம் என வும் ஆலோசனை கூறுகின்றேன். அரசாங் கம் எனது ஆலோசனைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

இலங்கையராகிய நாம் வேண்டுவது வெறும் அமைதி மட்டுமல்ல பூரணமான, அமைதி யான வாழ்க்கையே எவரின் கையிலும் ஆயு தம் இருப்பதை நாம் விரும்பவில்லை. தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் மற்றும் வெறு இனத் தவர், புலிகள், இராணுவத்தினர் , பொது மக்கள் ஆகியோர் என இரண்டு இலட்சத் துக்கு மேற்பட்ட உயிர்களை நாம் இழந்துள் ளோம். ஆனால் அவர்கள் அனைவரும் நம் நாட்டு பிரஜைகளே.

ஆகவே நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இராணுவ ஆட்சியோ பொதுமக்கள் மத்தி யில் இராணுவக்குடியிருப்புக்களோ வேண் டாம் என ஒரே கூரலில் கூறுவோம். நாம் வேண்டுவது இராணுவத் தலையீடற்ற சிவில் நிர்வாகமே. பொம்மைக்கடைகளிலும் விளை யாட்டுத் துப்பாக்கிகள் கூட விற்பதனை நாம் வெறுக்கின்றோம்.

எமக்கு துப்பாக்கி கலாச்சாரம் வெறுத்து விட்டது. அரசு மட்டும் முன்னின்று நாட்டில் உள்ள ஆயுதங்களை மீளப் பெறுவதோடு இராணுவத்தின் நடமாட்டத்தையும் கட்டுப் படுத்தி முகாம்களிலேயே தங்கவைக்குமா னால் பொதுமக்களாகிய நாங்கள் வேறு எவ ரிடமும் ஆயுதம் இல்லாது பார்த்துக்கொள் வோம்.

இறுதியாக அரசு எனதுவேண்டுகோளை செவிமடுத்து மக்களை அமைதியாக வாழ விடவேண்டும் என வேண்டுகின்றேன். மக்கள் எதுவித மேலாதிக்கமுமின்றி சுதந்திரமாக நடமாடத்தொடங்கும் போது ஏனைய விடயங் களைப்பற்றி ஆலோசிக்கலாம். அப்படிச் செய்யத் தவறினால் இவ்வளவு காலமும் எடுத்த முயற்சிகள் பல்வேறு பிரிவு மக்கள் செய்த



தியாகங்கள் அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்.

தமக்கு இஷ்டம் இல்லாத விடயங்கள் பற்றி நேரடியாகத் தெரிவிக்கும் தைரியம் இன்றி மக்கள் முணுமுணுக்க ஆரம்பித்து விட்டார் கள். அவர்களின் கவலைகள் எல்லாம் எது வித கருத்துக்களையும் சாத்வீகமான முறை யில் எடுத்துக்கூற கூடிய நிலை இன்று நாட் டில் இல்லையே என்பதே. நான் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புவது என்ன வென் றால் அரசாங்கம் அவ்வாறான நடவடிக்கை களை கைவிடாது விட்டால் நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு அமைதியைக்கொண்டுவந்த தாக தம்பட்டம் அடிக்க முடியாது. நான் தெரி விப்பது மக்களின் குரலே. (ந)

## பேக்கரி உற்பத்திப்பொருட்களுக்கான வரியைக் குறைக்க நடவடிக்கை

### அமைச்சர் ஜோன்சன் உறுதி

(கொழும்பு)

பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்கு விதிக் கப்பட்டுள்ள தேச நிர்மான வரியைக் குறைப் பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ பேக்கரி உரிமை யாளர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதியிடம் கலந் துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேக்கரி உரிமையாளர் சங்க உறுப்பினர் களுடன் இடம்பெற்ற உரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

450 கிராம் பாண் ஒன்றை உரிய நிறை யுடன் மக்களுக்கு வழங்குவது அவசியம் என பேக்கரி உரிமையாளர்களிடம் அமைச் சர் சுட்டிக்காட்டினார்.

மேலும் பேக்கரி உரிமையாளர்களின் பிரச் சினைகள் தொடர்பாக அமைச்சரிடம் விரி வாக எடுத்துக் கூறியதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எம்.கே. ஜெயவர்தன தெரிவித்தார். (6)


விசேட புலமைப்பரிசில் திட்டம் 2010

B.Sc. in Computer Science 30 Months

Diploma in Multimedia with IT 12 Months

கற்கைநெறிகளை குறைந்த கட்டணத்தில் கற்று பட்டதாரியாகுங்கள்!!! வெளிநாடு செல்லுங்கள்!!!

மேலதிக விபரங்கள்:-

#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.

Please Call -- 0213214305

புதிய மாணவர்கள் - - -

8th International Convocation

இன் போது கௌரவிக்கப்படுவார்கள்!

Isles Internationale Universite + North Lanka IIT

இணைந்து நடாத்தும்

எமது நிறுவனத்தில் பயின்று பட்டதாரிகளாகிய மாணவர்கள், மற்றும் வெளிநாட்டு பட்டதாரி மாணவர்களுக்கான

8th International Convocation, Colombo BMICH இல் 16th July 2010 அன்று

நடைபெறவுள்ள மகிழ்ச்சியான தருணத்தில் நீங்களும் இணைந்து

கணினிப்பட்டதாரியாக அரிய வாய்ப்பு!

<<<O/L தகமையுடன் >>>




முன்னுரிமை அடிப்படையில்

முதல் 50 மாணவர்களுக்கு 50% அதிரடி கட்டணச் சலுகை!

25000/= முதல் 75000/= வரை

Offer! Offer!

# நிலவில் அதிக தண்ணீர் !





பூமியில் தண்ணீர்ப்பற்றாக்குறை அதிகரித்து வருவதால், இனி பிற கிரகங்களில் இருந்துதான் தண்ணீர்கொண்டு வர வேண்டுமென்று 'ஜோக்' அடிக்கப்படுவது உண்டு. எதிர்காலத்தில் அது சாத்தியமானால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இரவில் இதுவரை நினைக்கப்பட்டதைவிட நூறு மடங்கு தண்ணீர் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நிலவின் நிலப்பரப்புக்குக் கீழே அது பரவியுள்ளதாக கூறுகின்றனர் விஞ்ஞானிகள்.

அப்பலோ விண்வெளிப் பயணத்தில் எடுத்துவரப்பட்ட தாதுக்களை ஓர் அமெரிக்க விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்தது. அப்போது , முன்பு நினைத்ததை விட நிலவின் தாதுப் பாறைகளில் 100 மடங்கு தண்ணீர் இருக்கும் என்று அக்குழு முடிவுக்கு வந்தது.

" நிலவின் உட்புறப் பகுதியில் தண்ணீர் பரவலாகக் காணப்படலாம்.40 ஆண்டுகளுக்கு மேலாக நிலவு உலர்ந்து போய்த்தான் இருக்கிறது என்று நினைத்தோம். அது தற்போது மாறியுள்ளது. தற்போது நாம் நிலவின் உட்புறப் பகுதியில் தண்ணீரின் தோற்றம், அதன் தாக்கங்கள் பற்றி ஆராயத் தொடங் கலாம்" என்று அமெரிக்க ஆய்வுக் குழு வில் இடம்பெற்ற ஒருவிஞ்ஞானி தெரிவிக்கிறார்.

ஆனால் பூமியில் காணப்படும் நிலத்தடி நீரைப்போல நிலவில் உள்ள தண்ணீரை எளிதாகப் பிரித்தெடுக்க முடியாது. நிலவின் பாறை உட்புறப் பகுதியில் தண்ணீர் கலந்த நிலையில் உள்ளதென்றும் அவர் கூறுகிறார்.

# எழுத்து, படமில்லாத மணக்கும் பத்திரிகை!



ஜேர்மனியில் வெளியிடப்பட்டிருக்கும் ஒருபத்திரிகையில், அச்சிட்ட எழுத்துக்களோ, படங்களோ கிடையாது. ஆனால் அந்த இரவில் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு விதமாக மணக் கிறது.!

பெர்லினில் இருந்து வெளி வரும் "மோ னோகுல்ட்டு" ஒரு கலைப் பத்திரிகை. ஒவ் வொரு வாரமும் ஓர் ஓவியக் கலைஞர் அல்லது திரைப்படக் கலைஞரை அடிப்படையாக வைத்து கட்டுரைகளை வெளியிடுவது இப் பத்திரிகையின் வழக்கம்.அந்த வகையில் நோர்வே நாட்டு வாசனை ஆராய்ச்சியாளரும் கலைஞருமான சிசல்டொல்லாசை அடிப்படையாகக் கொண்டு ஓர் இதழை வெளியிட முடிவு செய்தனர்.அதில், சிஸலின் பணியை வாசகர்கள் உணரச் செய்யவும் திட்ட மிட்டனர்.


அதற்காக " மைக்ரோ என்காப் சுலே சன்" என்ற தொழில்நுட்பத்தை அவர்கள் பயன்படுத்தினர். அதில் , சிஸல் உருவாக் கிய வாசனைகள் ஒவ்வொரு பக்கத் திலும் மணக்கின் றன. அது 'பளிச்' சென்று வாசகர்களைக் கவர வேண் டும் என்பதற்காக இதழில் வார்த்தை களையோ, படங்களையோ இடம்பெறச்செய்யவில்லை.

பத்திரிகை வாச கர்கள் பக்கங்களை இலேசாகத் தங்கள் விரலால உரசினால் உடனே நறுமணம் எழும்பும். குறிப் பிட்ட பத்திரிகையின் வாசகர் ஒருவர் கூறுகையில், " ஒரு பத்திரிகையில் உங்களின் விருப்பமான பகுதி, மணத்துடன் வந்தால் அது அசத்தலான விடயம் தான்!" என்கிறார்.

# போட்டியைப் பார்த்தால் எடை குறையும்!

உலகம் முழுவதும் உலகக் கிண்ண கால்பந்துப் தொடருக்கான தொலைக்காட்சி. முன் தவம் கிடக்கிறார்கள்.இதன்மூலம் ஒரு நன்மை இருக்கிறது. ஒரு உலகக்கிண்ண போட்டியை தொலைக்காட்சியில் பார்த்தால் 740 கலோரிகள் காலியாகின்றன என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இங்கிலாந்தின் 'லிவெல்ட் ஹெல்த்' என்ற நிறுவனம் இது தொடர்பான ஆய்வை நடத்தியது. அதில், ஒரு கால்பந்துப் போட்டியை அதற்கு முந்தைய, பிந்தைய அலசல்களுடன் சேர்த்துப் பார்க்கும் ஒரு ரசிகர், ஜாலியாக கால்பந்து விளையாடுவதை விட அதிக கலோரிகளை எரிக்கிறார் என்று தெரிய வந்துள்ளது.



ஆனால் அந்த நன்மை எல்லாம், தொ லைக்காட்சி பார்த்துக்கொண்டு நொறுக்குத் தீனியை 'நொறுக்கினால்' அல்லது மதுபானம் பருகினால் கிடைக் காதென்றும் விஞ்ஞானிகள் எச்சரிக் கிறார்கள். அதே நேரம் உலகக் கிண்ண போட்டி யில் ஒருவரின் அபிமான அணி தோல்வியுற்றால் அதுவும் அவரது உடல் நலத்தில் மறைமுகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

விறுவிறுப்பான போட்டிகளின் போது ரசிகர்களுக்கு ஏற்படும் டென்சன், உற்சாகம், அதிக இரத்த அழுத்தத்தால் கூடுதலாக கலோரிகள் எரிக்கப்படுகின்றன என்கிறார்கள் ஆய்வாளர்கள். ரசிகர்கள் சிலரிடம் இங்கிலாந்து -அமெரிக்க போட்டியின் போது 'கலோரி கண் காணிப்பான்களை' பொருத்தி ஆய்வு செய்யப்பட்டதில் இந்த உண்மை தெரிய வந்தது.

" ரசிகர்களுக்கு உடல் ரீதியான நன்மை தவிர,தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் தேசிய சுய கௌரவத்தையும் உயர்த்த கால்பந்துப் போட்டி வெற்றி உதவும்" என்கிறார் மனோதத்துவ நிபுணர் ரோஜர் கிங்கர்லீ.

பொதுவாக ஒரு கால் பந்துவீரர் போட்டியொன்றில் ஆடும்போது 850 முதல் 1200 கலோரி வரை எரிக்கிறார். அணியில் ஒரு வீரர் ஆடும் நிலைக்கேற்ப அவரால் எரிக் கப்படும் கலோரிகளின் அளவு மாறுபடும் என்று ஆய்வாளர்கள் கூறுகின் றனர்.




# சுருட்டக்கூடிய தொலைக்காட்சி

தொலைக்காட்சிப்பெட்டியை பாயைப் போல சுருட்ட முடியுமா என்று கேட்டால், "இதென்ன அபத்தமான கேள்வி?" என்பீர்கள். ஆனால் அப்படிச் சுருட்டி வைக்கக்கூடிய தொலைக்காட்சிப்பெட்டி. சந்தைக்கு வரும் காலம் வெகுதொலைவில் இல்லை என் கிறார்கள் விஞ்ஞானிகள்.

பின்லாந்து நாட்டின் " மிலேனியம் டெக்னோலஜி பிறைஸ்", புதிய கண்டு பிடிப்புக்கான " நோபல் பரிசாக" க் கருதப் படுகிறது. அந்த விழாவுக்கு அழைக்கப் பட்டுச் சென்ற இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் பிரண்ட் . அங்குதான் அவர், சுருட்டக்கூடிய தொலைக்காட்சி பற்றிய விபரத்தைத் தெரிவித்தார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சியின் மூலம், அம் மாதிரியான தொலைக்காட்சி விரைவில் சாத்தியமாகும் என்கிறார் இவர்.




" பிளாஸ்ரிக் மின்னணுப் பொருட்கள் தற்போது முக்கியமான ஆய்வு விடயங் களாக அமைந்திருக் கின்றன. வருங்காலத்தில் இத்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. நவீன 'எம்பி 3 பிளேயர்' களிலும் நவீன செல்போன்களிலும் ஏற்கனவே ஒளி உமிழும் ' ஆர்கானிக் டையோடுகள்' பயன்படுத் தப்படுகின்றன.

அவற்றைக் கொண்டு, சுவரில் ஒட்டக்கூடிய தொலைக்காட்சிப் பெட்டி தயாரிக்கலாம். குறைந்த மின்சக்தியைப் பயன் படுத்தும் விளக்குகளையும் உருவாக்கலாம்" என்கிறார் ரிச்சர்ட்.

இந்த சுருட்டக்கூடிய தொலைகாட்சி மிகமெல்லியதாக இருப்பது , குறைந்த மின்சக்தியைப் பயன்படுத்துவதோடு அல்லாமல், அவற்றின் படக்காட்சிகள் பிரகாசமாகவும், துல்லியமாகவும் இருக்கும் என்று ரிச்சர்ட் தெரிவிக்கிறார்.

# செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் ?

செவ்வாய்க் கிரகத்தில் நுண்ணுயிரினம் இருக்கக் கூடும் என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். கனடாவில், மீத் தேனை உற்பத்தி செய்யும் மீத்தே னோஜெனிக் பாக்டீரியா காணப்படும் ஓர் ஓடை உள்ளது. அது, செவ்வாய்க் கிரகத் தின் முந்தைய, தற் போதைய ஓடைகளைப்போலத்தோன் றுகிறது. எனவே செவ் வாய்க் கிரகத் தில் நுண்ணுயிரினம் இருக்கக்கூடும் என்று கருதப்படு கிறது.



கனடாவின் ஆக்ஸல் ஹீபர்க் தீவில் அமைந்துள்ள அந்த ஓடையில் பெரிய பெரிய மீத்தேன் குமிழ்கள் எழும்பி வந்தது ஆராய்ச்சியாளர் களின் ஆவலைத் தூண் டியுள்ளது. அந்த மீத்தேன் வாயு புவியியல் ரீதியாக உருவாக் கப்பட்டிருக்குமா அல்லது நுண்ணுயிர் இனத்தால் உருவாக்கப்பட் டிருக்குமா என்று கண்டுபிடிக்க நினைக் கிறார்கள்.

''அந்த லாஸ்ட் ஹாம்மர் ஓடையில் காணப்பட்ட நுண் ணுயிரினமானது காற்று தேவைப் படா ததாக இருந்ததை அறிந்து நாங்கள் ஆச்சரியம் அடைந்தோம். அது ,மீத்தேனை உண்டு,ஆக்சியனுக்கு பதிலாக சல்பேட் டைச் சுவாசித்து உயிர் வாழ்ந்து இருக்கிறது'' என்கிறார் வைட் . மீத்தேனும்,உறைந்த நீரும் மிகச் சமீபமாகத்தான் செவ்வாய் கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அவற்றுக் கான 'மூலம் கண்டு பிடிக்கப்படவில்லை.

கனடாவின் லாஸ்ட் ஹம்மார் தீவைப் போன்ற மிகக் கடினமான சூழல் தான் செவ்வாய்க் கிரகத்திலும் காணப் படுகிறது. 'பூமியில் நாம் அறிந்ததிலேயே லாஸ்ட் ஹம்மார் தீவில் தான் மிகவும் குளிரும், உப்புமான சூழ்நிலையைக்கொண்ட இடமாகும்.

இது,செவ்வாய்கிரகம் போன்ற ஓர் உறைந்த உலகத்தில் எப்படி மீத்தேன் கசிவு ஏற்பட முடியும் என்பதற்கான மாதிரியாகத் திகழ்கிறது' என்று லைல்வைட் தெரிவிக்கிறார்.

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கும் முயற்சியில் தற்போது ஒரு முக்கியமான அடி எடுத்து வைக்கப்பட்டிருப்பதாக விஞ்ஞான உலகம் கருகிறது.

# இலங்கையின் தொழிற்சட்டங்களை அமெரிக்கா மாற்றியமைக்க வேண்டிய அவசியமில்லை

## இலங்கை தொழிலாளர் ஒன்றியம் தெரிவிப்பு

இலங்கையின், தொழிற்சட்டங்களை அமெரிக்கா மாற்றியமைக்க வேண்டிய அவசியமில்லை என இலங்கைத் தொழிலாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அமெரிக்கத் தொழிற்சங்கமொன்று இலங்கைத் தொழிற்சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டுமென அமெரிக்க நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனு அடிப்படையற்றதெனவும் இலங்கையில் இயங்கி வரும் சில முறையற்ற தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளினாலேயே குறித்த தொழிற் சங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ள தெனவும் தொழிலாளர் ஒன்றியத்தின் தலைவர் ரவி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொழிற்சட்டங்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை எனப் பிரசாரம் செய்யும் நோக்கில் அமெரிக்க தொழிற்சங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டிய அவர்,

தென் ஆசிய நாடுகளுக்கு இடையில் இலங்கையில் மிகச் சிறந்த தொழிற் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு தொழிற்சங் களுக்கும் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுட்டுள்ளதாகவும் உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கைத் தொழிலாளர்களின் தரமும் உச்சளவில் உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவித்துள்ளார். (6)

## கிறிஸ்மஸ் தீவுக்கருகில் மேலுமொரு அகதிகள் படகு

இலங்கையர்களும் உள்ளடங்கியிருக்கலாம் என நம்பப்படும் 73 பேரைக் கொண்ட அகதிகள் படகு ஒன்று நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ் தீவுக்கு வடக்கே கைப்பற்றப்பட்டதாக அவுஸ்திரேலிய கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் உடனடியாக கிறிஸ்மஸ்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் தற்போது இவர்களுக்கு நாடு மற்றும் உடல் நிலை தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (6)

# நீதிமன்ற கட்டமைப்பை கண்காணிக்க பாராளுமன்ற தெரிவுக்குழுவை நிறுவவேண்டும்

## மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் நீதித்துறையை உதாசீனம் செய்யும் வகையில் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் நீதித்துறையை கடுமையான முறையில் கட்டுப்படுத்தி வருவதாகவும் நாட்டின் கடைநிலை நீதவான்கள் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை கட்டிக்காப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் வேளையில் சில உயர்நிலை நீதவான்கள் சுயாதீனத் தன்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் தீர்ப்புக்களை அளித்து வருவதாகவும் நீதவான்கள் மீது பல்வேறு வழிகளில் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நீதிமன்றக் கட்டமைப்பை கண்காணிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நிறுவவேண்டும் எனவும் பொலிஸ் திணைக்களம் சுயாதீனத் தன்மையை இழந்துள்ளதாகவும் ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு விசுவாசமாக செயற்படுவோருக்கு அதிக சலுகைகள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்படாத நாடுகளில் பொருளாதார அபிவிருத்தி எட்டப்பட்டதாக வரலாறில்லை எனவும் சிம்பாவே, வடகொரியா மற்றும் மியன்மார் போன்ற நாடுகளின் வரிசையில் இலங்கை இணைந்துக்கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டிய அவர் 17ஆவது திருத்தச் சட்டமூலம் மற்றும் சர்வதேச அரசியல் சிவில் உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் எவ்வாறு இலங்கையின் இறைமைக்கு குந்தகம் ஏற்படும் என அவர் கேள்வி எழுப் பியுள் ளார்.

இதேவேளைமுன்னுக்கு பின் முரணான கருத்துக்களை வெளியிடுவது மங்கள சமரவீரவிற்கு புதி தல்ல எனசிரேஸ்டஅமைச்சர் தினேஸ் குணவர்தனதெரிவித்துள்ளார்.

இன்று வெளியிடும் கருத்துக்கு முற்றிலும்முரணான கருத்துக்களை நாளைவெளியிடக்கூடிய வல்லமைமங்கள சமரவீரவிற்கு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். வரவு -செலவுத் திட்டம்தொடர்பில்பாராளுமன்றில் நடைபெற்ற விவாதத்தின் போது இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார். (6)


**19** வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

- தபால் மூலம் -

**July.2010 to Dec..2010**

தமிழ் மொழி மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010


# 04.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1054- சுப்பர்நோவா ஒன்று சீனர்களாலும் அரபுக்களாலும் அவதானிக்கப்பட்டது.
- 1634- நியூ பிரான்சில் ட்ரோய் -ரிவியேரெஸ் நகரம் உருவாக்கப்பட்டது. இது பின்னர் கியூபெக் நகரமானது.
- 1776- ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஐக்கிய அமெரிக்கா விடுதலையை அறிவித்தது.
- 1803- லூசியானா நகரம் விலைக்கு வாங்கப்பட்ட செய்தி அமெரிக்க மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.
- 1810-பிரெஞ்சுப் படைகள் ஆம்ஸ்டர்டாம் நகரைப் பிடித்தனர்
- 1865- ஆலிஸின் அற்புத உலகம் வெளியிடப்பட்டது.
- 1879- ஆங்கிலோ -சூலு போர் உலுண்டி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரின் பின்னர் முடிவுக்கு வந்தது.
- 1918- ரஷ்யாவின் சார் மன்னன் இரண்டாம் நிக்கலாஸ் மற்றும் அவரது குடும்பத்தினர் போல்ஷெவிக்கினரால் கொல்லப்பட்டனர் (யூலியின் நாட்காட்டி)
- 1941- நாசி ஜெர்மனியினரால் போலந்தில் லூவோவ் என்னும் இடத்தில் அறிவியலாளர்களும் எழுத்தாளர்களுமாக 45பேர் கொல்லப்பட்டனர்.
- 1946- 381 ஆண்டு குடியேற்றவாதிகளின் ஆட்சியின் பின்னர் பிலிப்பைன்ஸ் ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1976- உகாண்டாவில் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஏர் பிரான்ஸ் விமானத்தில் இருந்த அனைவரையும் இஸ்ரேலிய கொமாண்டோப் படையினர் விடுவித்தனர்.
- 1997- நாசாவின் பாத்ஃபைண்டர் விண்கலம் செவ்வாய்க்கோளில் இறங்கியது.
- 2006- டிஸ்கவரி விண்ணோடம் 18: 37:55 UTC மணிக்கு விண்ணுககு ஏவப்பட்டது.

## பிறப்புகள்

- 1807- கரிபால்டி நவீன இத்தாலியின் தந்தை (இ.1882)
- 1872- கால்வின் கூலிட்ஜ் ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது ஜனாதிபதி
- 1898- குல்சாரிலால் நந்தா இந்தியாவின் 2ஆவது பிரதமர் (இ.1998)

## இறப்புக்கள்

- 1826-ஜோன் ஆடம்ஸ் ஐக்கிய அமெரிக்காவின் 2ஆவது ஜனாதிபதி (பி.1735)
- 1826- தோமஸ் ஜெஃவ்வர்சன் ஐக்கிய அமெரிக்காவின் 3ஆவது ஜனாதிபதி
- 1831-ஜேம்ஸ் மன்ரோ ஐக்கிய அமெரிக்காவின் 5ஆவது ஜனாதிபதி (பி.1758)
- 1934- மேரி கியூரி நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர் (பி.1867)

**1902-உலகம் போற்றும் ஆன்மீகத் துறவி சுவாமிவிவேகானந்தர் சமாதி யடைந்தார் (பிறப்பு- 1863)**



# நோர்த்சீ லிமிடெட்
# NORTHSEA LTD

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

*Factory : Gurunagar, Jaffna-Telephone- 021 3205696;*
*Fax No:021 222 2733; E-mail- northsealtd@sltnet.lk*

## நோர்த்சீ லிமிடெட்,
## வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள்

பின்வரும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**1.கணக்காளர் (Accountent) வெற்றிடம் -01 (ஆண்)**

யாழ். குருநகரில் இயங்கிவரும் வலைத்தொழிற்சாலையில் ஒப்பந்த அடிப்படையில் பணியுரிவதற்காக இவ்விண்ணப்பம் கோரப் படுகின்றது.

**கல்வித்தகைமை**

Intermediate level ICASL or CIMA or ACCA or Degree in Management or Commerce or HNDA தரச்சான்றிதழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**வேலை அனுபவம்**

அரச திணைக்களம்/ சுவட்டுத்தாபனம்/ சபை/ கம்பனி/தனியார் கம்பனிகள் போன்றவற்றில் குறைந்தது 3 வருடங்கள் கணக்கியல் மற்றும் நிதிமுகாமைத்துவத் துறையில் முகாமைத்தரத்தில் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனுபவம் விசேட தகுதியாகக் கொள்ளப்படும்.

**வயது எல்லை**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 25 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள மற்றும் நியமனம்**

மாதம் ரூபா : 25,000/= திரட்டிய சம்பளத்தில், ஒரு வருட காலம் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்படும். அத்துடன் அரசால் அங்கீகரிக்கப்படும் இதரபடிகள் வழங்கப்படுவதுடன், ஊழியர் சேமலாபநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன செலுத்தப்படும்.

**2.பயிலுநர்கள் (Trainee) வெற்றிடம் - 15 (ஆண் / பெண் இருபாலா ரும் விண்ணப்பிக்கலாம்)**

வலைபின்னும் இயந்திரம் இயக்குதல் மற்றும் அவை தொடர்பான செயற்பாட்டுப் பகுதிகளுக்கும், தொழில்நுட்ப பகுதிகளுக்கும் பயிலுநர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். தொழிற்சாலைச் சுற்றாடலில் இருந்து 3 KM பகுதிக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கதாகும்.

**கல்வித் தரம்**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் (O/L) பயின்றவராகவோ அல்லது மின்னியல், இயந்திரவியல் சான்றிதழ்கள் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

**வயது எல்லை**

விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம் மற்றும் நியமனம்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு வருடக் காலப் பகுதிக்கு பயிலுநராக நியமிக்கப்படுவர். இக்காலப் பகுதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 5000 இற்கு குறையாத தொகை வழங்கப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன செலுத்தப்படும்.

**இவ்விண்ணப்பங்கள் யாவும் அனுப்பிவைக்க வேண்டிய விபரம்**

இவ்வேலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரம் (CV) , உறுதிப்படுத்தப்பட்ட பிறப்பத்தாட்சிப் பத்திரம் மற்றும் கல்வி , வேலை அனுபவச் சான்றிதழ் பிரதிகளை பின்வரும் முகவரிக்கு 15.07.2010 அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர்,
நோர்த் சீ லிமிடெட்,
வலைத் தொழிற்சாலை, குருநகர்,
யாழ்ப்பாணம்.

(1798)


# பஸ்வண்டிகளின் குறைபாடுகள் தொடர்பாக தினமும் அதிகளவான முறைப்பாடுகள்

பஸ்வண்டிகளின் குறைபாடுகள் தொடர்பாக முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட பிரிவிற்கு நாளொன்றுக்கு 50 வரையிலான முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிடைக்கும் சகல முறைப்பாடுகள் தொடர்பாகவும் அந்த சந்தர்ப்பத்திலேயே தீர்வு பெற்றுக்கொடுப்பதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜயவிக்ரமரட்ண தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்திலிருந்து தமிழ்மொழி மூலமாக அங்குள்ள மக்கள் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

மேலும் பஸ் பயணங்களின் போது இடைநடுவில் ஏற்படும் பிரச்சினைகள், குறைபாடுகள் மற்றும் பஸ் ஊழியர்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பயணிகள் தமது பிரயாணப் பொதிகளை பஸ்களில் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுவதாக முறைப்பாடுகளில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினனும் முறைப்பாடுகளைத் தெரிவிக்கும் பிரிவின் நடவடிக்கை சிறந்த பலனை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பஸ்பயணிகள் தொடர்ந்தும் 0117555555 என்ற தொலைபேசியின் ஊடாகத் தொடர்பினை ஏற்படுத்தி தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (6)

# மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் இரு கால்களையும் இழந்த பெண்

ஆஸ்திரியா நாட்டின் மேற்கு மாகாணமான திரோல் நகரில் செயின்ட் ஜோகன் மருத்துவமனை உள்ளது. இங்கு காலில் ஏற்பட்ட நோய்க்கு சிகிச்சை பெற 91 வயது பெண் வந்தார்.

அவரை பரிசோதித்த வைத்தியர்கள் நோய் பாதித்த ஒரு காலை மட்டும் சத்திர சிகிச்சை மூலம் வெட்டி அகற்ற வேண்டும் என்றனர். அதற்கு அவர் சம்மதித்தார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு கடந்த மாதம் 16ஆம் திகதி சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போது நோய் பாதித்த காலுக்கு பதிலாக நல்ல நிலையில் இருந்த காலை வெட்டி வைத்தியர்கள் அகற்றினார்கள்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெண்ணும் அவரது குடும்பத்தினரும் இது குறித்து மருத்துவமனை நிர்வாகத்திடம் புகார் செய்தனர். இதை தொடர்ந்து மீண்டும் ஒரு சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது.

அப்போது நோய் பாதித்த கால் அகற்றப்பட்டது. வைத்தியர்களின் தவறான சத்திர சிகிச்சை மூலம் தற்போது அப்பெண் 2 கால்களையும் இழந்து தவிக்கிறார்.

நடந்த சம்பவத்துக்கு மருத்துவமனை நிர்வாகம் வருத்தம் தெரிவித்துள்ளதோடு மருத்துவத்தில் ஏற்பட்ட குளறுபடியால் இது போன்ற தவறு நடந்துவிட்டது என்று விளக்கம் அளித்துள்ளது.

இந்த தவறுக்கு காரணமான வைத்தியர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் ஆஸ்திரேலியாவில் உள்ள வைத்தியசாலைகளில் இது போன்ற தவறுகள் நடப்பது சர்வசாதாரணமாகிவிட்டது.

கடந்த 2005ஆம் ஆண்டு வைத்தியர்களால் தவறானமருந்து கொடுக்கப்பட்ட ஒரு நபர் இறந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (6)


# முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னையின்
மடியில்
28
♦
07
♦
1952



ஆண்டவன்
அடியில்
04
♦
07
♦
2009

## அமரர்
## இராசரத்தினம் செல்வநாயகம்

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"

யோவான் 11:25

எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
உங்களைப் போல் அப்பா உலகிலில்லை
உறங்காத விழிகளுடன் நாம் இங்கே
உங்கள் உயிர் பிரிந்த வேதனை நினைவுகள்
எங்கள் உயிர் உள்ளவரை மாறாதையா

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம்.

(சி/597)

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# தமிழ் மந்திரங்களே திருமுறைகள்

7



## சிவத்தமிழ் அன்னையின் நினைவுப் பேருரை

மேலும் பஞ்சாட்சர மந்திரத்தின் மாண்பு பற்றிக் கூறவந்த திருமூலர் பின்வருமாறு எடுத்தியம்பினார்.

*வாறே சிவாய நமச்சிவாயநம*
*ஆறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை*
*வாறே அருளால் வளர் கூத்துக் காணலாம்*
*வாறே செபிக்கில் வரும் செம்பு பொன்னே*

அதாவது சிவாயநம சிவாயநம என்று அவ்வாறே முறையாகச் செபித்து வந்தால் வரக்கூடிய பிறப்புக்கள் இனி வரா. அது மட்டுமல்ல. இறைவன் அருளால் காலாதி காலமாக நடக்கும் ஆனந்த நடனத்தைக் கண்டு களிக்கலாம். அத்துடன் அவ்வாறு செபித்தால் செம்பாக இருக்கும் எங்கள் ஜீவன் பொன்னான இறைவனாக மாறும் என்கின்றார்.

பஞ்சாட்சர மந்திரம் பற்றி திருமுறைகளில் பல இடங்களில் வருகின்றது.

*கற்றூணைப் பூட்டியோர் கடலில்*
*பாய்ச்சினும்*
*நற்றுணையாவது நமச்சிவாயவே*

என்றார் அப்பர்.

மேலும் " மாசில் வீணையும்" என்ற தேவாரத்தை அப்பர் பாடிய பின், பின்வரும் பாடலைப் பாடினார்.

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே யானறி விச்சையும்
நமச்சிவாயவே நா நவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

என்று பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பை விபரிக்கின்றார். (விச்சை-கல்வி, வித்தை, மந்திரம்)

பஞ்சாட்சர மந்திரத்தைப் பற்றிக் கூற வந்த சுந்தரமூர்த்தி நாயனார்

" மற்றுப்பற்று எனக்கின்றி நின்
திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத
தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுது ஏத்துஞ் சீர்க்கரையூரிற்
பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லும் நா நமச்சிவாயவே"

என்றார்.

தான் மறந்தாலும் நா மறக்காது நமச்சிவாய மந்திரத்தை செபித்துக் கொண்டிருக்கும் என்கின்றார் சுந்தரர்.

சம்பந்தப் பெருமானை நோக்கினோமானால்,

*காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி*
*யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்*
*வேத நான்கினும் மெய்ப்பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே*

என்று நமச்சிவாயத் திருப்பதிகமே பாடியுள்ளார்அவர். அந்தப் பதிகப் பத்துப் பாடல்களின் அடியில் திருக்கடைக்காப்பில் அந்த நமச்சிவாயத் திருப்பதிகத்தின் பலனைக் கூறும் இறுதிச் செய்யுளில்

*நந்தி நாமம் நமச்சிவாய வெனுஞ்*
*சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன் சொற்*
*சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லாரெல்லாம்*
*பந்த பாசமறுக்க வல்லார்களே*

என்கின்றார்.

மாணிக்க வாசக சுவாமிகள் தமது சிவபுராணத்தைத் தொடங்கும் போதே "*நமச்சிவாய வாழ்க*" என்று தான் தொடங்குகின்றார். அதன்பின்னர் தான் " நாதன் தாள் வாழ்க" என்கின்றார். இறைவனுக்கு முன்னர் அவனைக் குறிக்கும் அந்த ஐந்தெழுத்து மந்திரத்திற்கு முதலிடம் கொடுக்கின்றார்.

'ஓம்' என்றபிரணவம், 'நமச்சிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரங்களைக் கொண்டவை எங்கள் திருமுறைகள். திருமூலர் பஞ்சாட்சர வடிவமே கூத்தப்பிரானின் வடிவம் என்று 2798 ம் பாடலில் கூறுகின்றார்.

அதாவது

"*மருவும் துடியுடன் மன்னிய வீச்சு*
*மருவிய அப்பும் அனலுடன் கையும்*
*கருவின் மிதித்தே கமலப் பதமும்*
*உருவில் சிவாயநம என ஓதே*"

என்று கூறுகின்றார். உடுக்கையுடன் பொருந்திய கையும், நிலைபெற்ற வீசு கரமும், நீர் பொருந்திய சிரசும், மழுவேந்திய கையும் ஆணவமாம் கருவாகிய முயலகனை மிதித்த தாமரைப் பாதமும் சிவாயநம என்னும் மந்திரமாக நடராசப் பெருமானின் வடிவில் பொருந்தியுள்ளன என்பதே இதன் அர்த்தம்.

இதற்கு முந்திய பாடலில் அதாவது 2797 ஆம் பாடலில்

" திருந்து நற் சீ யென்றுதறிய கையும்
அருந்தவர் வா என்றணைத்த மலர்க்கையும்
பொருந்திய இமைப்பிலி ய வ் என்ற
பொற்கையும்
திருந்தத் தீ யாருந் திரு நிலை ம வ்வே

உடுக்கை ஏந்திய உதறிய கை சி என்ற எழுத்தைக் குறிக்கின்றது. அரிய தவத்தாரை வா என்று அழைப்பது அவர் மலர்க்கையாகும். இது அவரின் இடக்கை. இமையாத கண்ணுடைய இறைவனின் மற்றொரு கை ய வைக் குறிக்கும். இது அபயக்கரம். தீ ஏந்திய கை திரு ஆகும். திரு என்பது இங்கு ந என்ற எழுத்தைக் குறிக்கின்றது. நிலையாக ஊன்றிய இறைவனின் திருவடி ம என்ற மகரத்தைக் குறிக்கின்றது.

நடராசர் வடிவமே நமச்சிவாய மந்திர வடிவம் என்கின்றார். இதைப்போன்ற பாடல்களை மனதில் வைத்தே நான் முன்னர் கூறினேன். "தேவார திருவாசகங்களை, திருமுறைகளை நவீன டோனோஸ்கோப் போன்ற கருவிகளில் இட்டுப் பாருங்கள்; எங்கள் திருமுறைகள் மந்திரங்களே என்பது புலப்படும்" என்று.

நமச்சிவாய மந்திரத்தை முறையாக டோனோஸ்கோப்பில் ஓத அங்கு நடராசர் வடிவம் வரப்பெறும் என்பது எனது கருத்து. ஆனால் அவ்வாறு வருகின்றதோ இல்லையோ கடைச் சங்க காலத்துக்கு முற்பட்ட ஞானியாகிய திருமூலர் அவரின் பாடலிலேயே இறைவனின் நடராஜ வடிவத்தையும் நமசிவாய என்ற மந்திர ஒலியையும் ஒன்றொடொன்று இணைத்துப் பாடியுள்ளார்.

***ஆகவே என் சிற்றுரையின் சாராம்சத்தைக் கூறுவதாயின்,***

♦ எம்மைச் சுற்றி ஒலிஎங்கும் உள்ளது

♦ அந்த ஒலிகளுக்கெல்லாம் தாயாகிய பிரணவ ஒலியே இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தது.

♦ ஒலி, ஒளி அலைகளே நாம் காணும் இந்தப் பிரபஞ்சம்

♦ ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வும் வடிவங்கள் உண்டென நவீன விஞ்ஞானக் கருவிகள் பறைசாற்றுகின்றன.

♦ அந்த வடிவங்கள் சுமுகமான, அருள் வடிவான, அமைதி தரும் வடிவங்கள் எனில் அந்த வடிவங்களை ஏற்படுத்தும் ஒலிகளை நிறைமொழி மாந்தர்களே வகுத்திருக்கின்றார்கள் என்பதால் அவை மந்திரம் என்றே கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் மந்திரம் என்பவை எப்பேர்ப்பட்டவரிடம் இருந்து வரல் வேண்டும், எப்பேர்ப்பட்ட சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று முன்னமே கூறப்பட்டுள்ளது.

**ஓய்வுபெற்ற நீதியரசர்**
**சி.வி.விக்னேஸ்வரன்**

♦ அந்த வகையில் திருமுறைகள் நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்தீ மறைமொழிகளே. அவை "*மனனாத் த்ராயதே*" என்ற சூத்திரத்திற்குக் கட்டுப்பட்டவை. அதாவது அவற்றை உச்சரிப்பதால் உயிரினங்கள் பாதுகாக்கப்படுவன.

♦ திருமுறைகள் அந்த வகையில் மந்திரம் என்ற சொல்லுக்கு முற்றிலும் கட்டுப்பட்ட பாடல்களே. வடமொழி மந்திரங்களை தமிழில் மொழிபெயர்த்துப் பாடுவதிலும் பார்க்க நிறைமொழி மாந்தரின் மறைமொழிகளான திருமுறைகள் மந்திரங்களாகப் பாவிக்கப்படலாம் என்பதே எனது கருத்து. (முற்றும்)

## கிறிஸ்மஸ் தீவில் இலங்கையர் ஒருவர் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை புகலிடக்கோரிக்கையாளர் ஒருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விலாவுட் தடுப்பு முகாமில் தூக்கிட்டு தனது உயிரை மாய்த்துக்கொள்ள குறித்த இலங்கையர் முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் 28 வயதான குறித்த இலங்கையர் நியாயமான புகலிடக் கோரிக்கையாளர் என்ற போதிலும், பாதுகாப்பு சோதனைகள் முடிவடையாத காரணத்தினால் தொடர்ந்தும் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் தீவில் இந்த வாரம் நான்கு பேர் இவ்வாறு உயிரை மாய்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

## இலங்கை அரசாங்கம் ஐ.நா.விடம் மன்னிப்பு கோருமா?

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் மன்னிப்புக் கோரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளையை முற்றுகையிட்டு அதன் பணியாளர்களை வீட்டுக் காவலில் வைக்க வேண்டுமென வீடமைப்பு மற்றும் பொறியியல் அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் அரசாங்கம் மன்னிப்பு கோரலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் மன்னிப்புக் கோரக்கூடிய சாத்தியம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பேச்சாளர் சரா ஹக் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் கூற்று தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஏதேனும் விளக்கங்களையோ அல்லது மன்னிப்பையோ கோருமா எனப் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் கருத்து தனிப்பட்ட கருத்து எனவும் அது அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## இலங்கைக்கான உதவிகளை பிரான்ஸ் தொடர்ந்து வழங்கும்

### அந் நாட்டு தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரான்ஸ் அரசாங்கம் இலங்கைக்கான தனது அபிவிருத்தி ரீதியான உதவிகளை தொடர்ந்து வழங்கும் என இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்டின் றொபின்சன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் நீர் வழங்கல் செயற்றிட்டம் ஒன்றிற்கான நிதியுதவி தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்ட பின்னரே பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்டின் றொபின்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகியன நீண்டகால நட்பு நாடுகள் என்ற வகையில் இவ்வாறான உதவிகள் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்போது பிரான்ஸ் அரசாங்கத்தினால் திருகோணமலை மாவட்டத்தின் நீர்விநியோக செயற்றிட்டத்திற்கு 1.8 பில்லியன் ரூபாய் நிதியுதவிக்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்தின் ஊடாக 3 இலட்சம் பேர் வரை பயனடைவார்கள் என நம்பப்படுகிறது. (6)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கை நிராகரிப்பு


(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீ மூன் நியமித்துள்ள நிபுணர்கள் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி கெத்தரின் அஸ்மன் இலங்கை அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரம் தொடர்பில் கோரிக்கைவிடுக்க ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எந்த உரிமையுமில்லை என அரசாங்கம் கூறியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு முன்னர், அமெரிக்க இவ்வாறான கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# 2010 வரவு-செலவு திட்டம் ஒரு பார்வை:



7-வது நாடாளுமன்றத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## ★ முதல் காலாண்டில் 7.1 வீத பொருளாதார வளர்ச்சி

## ★ பணவீக்கம் ஜூனில் 4.6 வீதத்தினால் வீழ்ச்சி

## ★ காங்கேசனிலிருந்து கதிர்காமத்துக்கு புகையிரதப்பாதை

## ★ கலாசார மரபுரிமைகளைப் பாதுகாக்க 10 வருடத் திட்டம்

2010ஆம் ஆண்டுக்கான (நடப்பாண்டு)வரவு செலவுத் திட்டத்தில், பாடசாலை மாணவர்கள், பாலூட்டும் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கு விசேட சலுகைகளை அறிவித்துள்ள அரசாங்கம், அரசாங்க மற்றும் தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு உட்பட குறிப்பிடத்தக்க சலுகைகளை முன்வைக்கவில்லை.

இலவச பாடப் புத்தகங்கள், இலவச போஷாக்குணவு, சீருடைகள் (பாடசாலை), போக்குவரத்து மானியங்களுக்கென குறிப்பிட்ட தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சமுர்த்தித் திட்டம், இளைப்பாறல் நன்மைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் நன்மை பயக்கும் வகையிலும் கணிசமான அளவு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலவச சுகாதார சேவையினை தொடரும் வகையிலும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இதனைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார். இதன்போது எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக அவர் தெரிவித்த விடயங்கள் இங்கே ஒரே பார்வையில் தரப்படுகிறது,

❁ இலவசப் பாடப் புத்தகங்கள், சீருடைகள், சுமார் 3 மில்லியன் பாடசாலைப் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில்கள், போக்குவரத்து மானியம் மற்றும் போஷாக்குணவு என்பவற்றுக்காக ரூ.7363 மில்லியன்.

❁ சுமார் 74 ஆயிரம் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்கு மேம்பாட்டுக்கென ரூ.2500 மில்லியன்.

❁ நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சுமார் 25 ஆயிரம் பேருக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கவென ரூ.7500 மில்லியன்.

❁ சமுர்த்தித்திட்டத்தின் கீழ் நன்மை பெறும் குடும்பங்களின் வருமான விரிவாக்கல் திட்டத்திற்கென ரூ.9300 மில்லியன்.

❁ சுமார் 450,000 அரச ஊழியர்களின் இளைப்பாறல் நன்மைகள் மற்றும் சுமார் ஆறாயிரம் ஊனமுற்ற படைவீரர்களுக்கான கொடுப்பனவு போன்ற சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.102,500 மில்லியன்.

❁ சுமார் 2 மில்லியன் விவசாயிகள் நன்மைபெறும் வகையில் உர மானியங்கள், மானியக் கடன்கள் மற்றும் உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு என்பவற்றுக்காக ரூ. 35,000 மில்லியன்.

★ அரச சுகாதார பராமரிப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் சுமார் 50 மில்லியன் உள்ளக மற்றும் வெளி நோயாளர்களுக்கான மருந்துப் பொருட்களுக்கென ரூ.13,300 மில்லியன்.

★ புகையிரதம் மற்றும் இ.போ.ச. என்பவற்றின் செலவினங்களை ஈடு செய்வதற்காக மானிய அடிப்படையிலான போக்குவரத்து சேவையைப் மேற்கொள்ளவென ரூ.6650 மில்.

★ அரச ஊழியர்களின் ஓய்வூதியத்துக்கென ரூ.93 பில்லியன்.

★ உரமானியத்திற்கென ரூ. 30 பில்.

★ சமுர்த்தி நலன்புரி நடவடிக்கைகளுக்குகாக ரூ.35 பில்லியன்.

★ பெருந்தெருக்கள் அபிவிருத்திக்கு ரூ.83.4 பில்லியன்.

★ துறைமுக, விமான சேவை மேம்பாட்டுக்கு ரூ.30.5 பில்லியன்.

★ நீர்ப்பாசனப் பணிகளுக்கென ரூ.12 பில்லியன்.

★ ஒரு இலட்சம் புதிய குடிநீர் இணைப்புகள்.

★ 250,000 புதிய மின் இணைப்புகள்.

★ பாதை புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 530 கிலோமீற்றர் தேசிய பாதைகள், 300 கி.மீ. மாகாணப் பாதைகள், 34 புதிய பாலங்கள் அபிவிருத்தி.

★ சுற்றுலா, கட்டிட நிர்மாணம் தகவல் தொழில்நுட்பம், பெருந்தோட்ட கைத்தொழில், நகர அபிவிருத்தி, கைத்தொழில் நகராக்கல், மருத்துவ வசதி, விவசாயம், கால்நடை போன்ற துறைகளில் தனியார் துறையினர் முதலிட வசதி, வாய்ப்புகள்.

### துண்டு விழும் தொகை வீழ்ச்சி

கடந்த வருடம் 476.4 பில்லியன் ரூபாயாகக் காணப்பட்ட வரவு செலவுத் திட்டப்பற்றாக்றை இவ் வருடம் 438.8 பில்.ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகை 438.8 பில்லியன் ரூபாய். இது 8 சதவீதமாகும்.

### வரவு செலவுத் திட்டத்தின் சுருக்கம் 2009-2010

| ரூபா.பில்லியனில் | 2009 | 2010 |
|---|---|---|
| மொத்த வருமானம் மற்றும் மானியம் | 725.57 | 840.99 |
| மொத்த வருமானம் | 699.64 | 817.79 |
| வரி வருமானம் | 618.93 | 729.01 |
| வருமான வரி | 139.56 | 160.34 |
| பொருட்கள் சேவைகள் மீதான வரி | 352.01 | 423.44 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | 127.37 | 145.23 |
| வரியில்லா வருமானம் | 80.71 | 88.77 |
| மானியம் | 25.92 | 23.20 |
| மொத்த செலவினம் | 1,201.93 | 1,279.82 |
| மீண்டெழும் | 879.58 | 928.34 |
| சம்பளங்களும் கூலிகளும் | 271.23 | 296.71 |
| வட்டி | 309.68 | 337.21 |
| மானியங்களும் மாற்றல்களும் | 190.17 | 202.89 |
| ஏனைய பொருட்களும் சேவைகளும் | 108.50 | 91.54 |
| அரசாங்க முதலீடுகள் | 330.45 | 361.48 |
| கல்வி மற்றும் சுகாதாரம் | 29.79 | 40.80 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 300.66 | 300.68 |
| பிற | (8.10) | (10.0) |
| வருமான மிகை(+)/பற்றாக்குறை(-) | (179.93) | (110.55) |
| வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | (476.36) | (438.84) |
| மொத்த நிதியளிப்பு | 476.36 | 438.84 |
| மொத்த வெளிநாட்டு நிதியளிப்பு | 83.89 | 123.50 |
| வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் | 26.48 | 93.50 |
| தேசிய வெளி.கடன் பெறுகைகள் | 147.03 | 172.50 |
| கடன் மீள் கொடுப்பனவு | 110.29 | 71.00 |
| வெளிநாட்டு வர்த்தகம் | 57.41 | 30.00 |
| மொத்த உள்நாட்டு நிதியளிப்பு | 392.48 | 314.34 |
| வங்கியில்லாத கடன் பெறுகை | 196.53 | 235.84 |
| வெளிநாட்டு முதலீடு திறைசேரி உண்டியல் /முறிகள் | 146.92 | 34.50 |
| வங்கிக் கடன் பெறல் | 49.03 | 45.00 |
| வருமானம் மற்றும் மானியம்/ மொ.உ.உ. (%) | 15.0 | 15.3 |
| வருமானம் / மொ.உ.உ. (%) | 14.5 | 14.9 |
| வரி வருமானம் / மொ.உ.உ. (%) | 12.8 | 13.3 |
| செலவினம்/ மொ.உ.உ. (%) | 24.9 | 23.3 |
| மீண்டெழும் செலவினம்/ மொ.உ.உ. (%) | 18.2 | 16.9 |
| அரச முதலீடு/ மொ.உ.உ. (%) | 6.8 | 6.6 |
| வருமானப் பற்றாக்குறை/ மொ.உ.உ. (%) | (3.7) | (2.0) |
| வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை/மொ.உ.உ.(%) | (9.9) | (8.0) |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது.*




# வடக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க 2 பில்லியன் டொலர்

வட பகுதியில் போருக்கு பின்னரான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவென சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய் (2 பில்லியன் அமெரிக்க டொலர்) செலவிடப்படுவதாக பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா, இந்தியா, சீனா, ஜப்பான், சுவிட்சர்லாந்து, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன வழங்கியுள்ள இந்த நிதியைக் கொண்டு அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அபிவிருத்திப் பணிகளை பூர்த்தி செய்ய முடியுமென்று அமைச்சர் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் கலாநிதி அமுனுகம,

தலைமன்னாரிலிருந்து மதவாச்சியையும், ஓமந்தையிலிருந்து காங்கேசன்துறையினையும் இணைக்கும் வடக்கின் புகையிரதப் பாதைகளை அமைத்தல், அதே போன்று ஏ-9 மற்றும் ஏ-32 போன்ற தேசிய பெருந்தெருக்கள் நிர்மாணமும் திட்டமிடப்பட்டுள்ளது.

நீர் வழங்கல், பாதைகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், நீதிமன்றங்கள், குடிநீர், நீர்ப்பாசனம் மற்றும் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதியேற்பாடுகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன. பிணக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனரமைப்பு மற்றும் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான உதவிகள் மேற்படி அமைப்புகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.

பிணக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட மொத்த நிதி ஏறக்குறைய 2 பில்லியன் ஐ.அ. டொலர்களாகும். இப் பிரதேசங்களில் அடுத்த 2 முதல் 3 வருடங்களுக்கான அபிவிருத்தித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இது அரசாங்கத்தினை இயலச்செய்யும் எனவும்,

வடக்கு மற்றும் கிழக்கில் முதலீட்டுவாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்ட துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு, வடக்கில் உறுதியான பொருளாதார அடிப்படையொன்றினை கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.71 | 114.22 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 170.47 | 174.04 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 140.36 | 143.76 |
| சுவிஸ் பிராங் | 105.29 | 108.57 |
| கனேடிய டொலர் | 105.77 | 109.17 |
| அவுஸ்திரேலிய டொலர் | 95.00 | 97.81 |
| சிங்கப்பூர் டொலர் | 80.71 | 82.40 |
| ஜப்பான் யென் | 1.27 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.90 | |

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4596.01 | (14.70) |
| மிலங்கா விலைச்சுட்டி | 5216.21 | (33.00) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 3436.09 | |

***உயர்வடைந்த பங்குகள்:*** ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், களனி வேலி பிளான்ரேசன், சிங்கர் சிறிலங்கா, ஹேமாஸ் ஹோல்டிங், டிப்ட் புறடெக்ஸ்.
***சரிவைக் காட்டிய பங்குகள்:*** கார்ஷன்ஸ், எச்.என்.பி., கொழும்பு டெக்யாட், நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி, கொழும்பு போர்ட் இன்வெஸ்மன்ட்.

# மக்கள் வங்கியின் 49-வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள்

1961ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி இலங்கை வங்கித் துறையில், கிராம அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு ஆரம்பிக்கப் பட்ட மக்கள் வங்கி, கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை 49-வது வருடப் பூர்த்தியைக் கொண்டாடியது.

தனது 49ஆவது வருட பூர்த்தியைக் கொண்டாடும் முகமாகவும், தனது வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் முகமாகவும் 'இதுரும் பத' என்ற சேமிப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கின்றது. 6 மாத காலம் செல்லுபடியாகும் இச் சேமிப்புத் திட்டமானது 5000, 50000, 100000 பெறுமதியான சேமிப்புப் பத்திரங்களை கொண்டுள்ளது.

இத் திட்டம் ஜூலை முதலாம் திகதி முதல் வரும் 6 மாத காலம் வரை செல்லுபடியாகும். இப்போட்டியானது ரூ.5000 பெறுமதியான சேமிப்புப்பத்திரங்களை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் குலுக்கல் முறையிலான வெற்றியாளர் தெரிவுக்கு அவரது பெயர் ஒருமுறை தெரிவுசெய்யப்படும். அதாவது 5000 ரூபாய் பெறுமதியான சேமிப்பு பத்திரத்திற்கு ஒரு அதிர்ஷ்ட வாய்ப்பு உண்டு. இதில் 100000 ரூபாய் பெறுமதியான சேமிப்பு பத்திரங்களை கொள்வனவு செய்வதன் மூலம் 20 அதிர்ஷ்ட வாய்ப்புகள் உள்ளன.

இந்த 'இதுரும் பத' சேமிப்பு பத்திரங்களை செப்டெம்பர் 30ஆம் திகதிவரை நாடுபூராகவுமுள்ள சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும் கொள்வனவு செய்ய முடியும். இதற்கு மேலாக தங்க நாணயங்களை வெற்றியீட்டும் வாய்ப்பும் உள்ளது.

இத்துடன் கடந்த 2009-ம் ஆண்டு நடைபெற்ற தரம் 5க்கான புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (உ/த) என்பவற்றில் அதிகப்படியான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில் திட்டம் ஒன்றையும் மக்கள் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

# கவிதைக் கலசம்


## சங்குநாதம்

### தேடல்கள்

அகங்களை ஆழ
ஊடுருவிப்போனது
நிஜங்கள்
நீண்டு போன
நிச்சயதார்த்தங்களில்
மாண்டு போனது
என் சுயம்வரங்கள்
இருந்தும்
இன்னும்
தேடிக்கொண்டிருக்கிறேன்
சுகங்களின்
சுவடுகளை...



க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.




### சுகமான காத்திருப்பு

காதலித்துப் பார்த்தேன்
காத்திருப்பு சுகமானது.
ஆனால், உன்னால்
எனது காத்திருப்பினை
உணர முடியவில்லை
அன்பே!
எனது தனிமை நிமிடங்கள்
உனது பிரிவினை
உணர்கிறது.
ஆனால்,
உனது பிரிவு
தற்காலிகமானது!
எனது காதல் மட்டுமே
இவ் உலகத்தில்
நிரந்தரமானது!

வி.மீரா.
திருநெல்வேலி.

### கவிக்குயிலே

கண்ணுக்கு கண்ணாக
நான் வளர்த்த
கவிக்குயிலே
காதோரம் சொல்லாமல்
கடவுளிடம் சென்றதேனோ
கொஞ்சும் மொழி பேசி
செல்ல நடை நடந்த
செல்லக் கவிக்குயிலே
சொல்லாமல்
எனை விட்டு நீங்கி
சென்றதேனோ
பட்டுப் பாவாடையுடன்
பாரீபோற்ற இவ்வுலகில்
பவனி வந்த கவிக்குயிலே
பாதியிலே எனை
பரிதவிக்கவிட்டுச்
சென்றதேனோ...?

தி.மேரிடயானா
யாழ்ப்பாணம்.

### வாசம்

ஆயிரம் பூக்களில் மலர்ந்த
வாசனையை
மறந்திருந்தேன்- ஆனால்
உன் முகத்தில் பூக்கும்
அன்பு என்ற பூவின்
வாசனையை மறக்க
முடியுமா?

பி.பிருந்தா

### காரிருள் நிலா

துயரங்கள் கொடியாய் படர
விடுதலையில்லாத மரமாகி
பெற்றவரை பிஞ்சிலிழந்து
உற்றவனுக்கு வாசுகியாகி
மன்றாடுவாள் எந்நாளும்......
நிம்மதியை வரமாக
அந்த ஆண்டவனிடம்
சுதந்திர பூமியில்
சுற்றி வளைக்கப்பட்ட
என்தாய்!

ரி.சீதா, கலைப்பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### இமயம் தொட...

ஓடும் முகில்களைப் பார்
முடிவில்லாப் பயணங்கள்
தொடர்கின்ற போதும்
முட்டிமோதி
முன்னேறிச் செல்கிறது
தொடர்ந்து கொண்டேயிரு
தோல்விகள் வாழ்வல்ல
வெற்றிக்கான விதைகளே!

மாவை. நா.கஜேந்திரா

### உயர்ந்தவர் மாட்டே

கோவையில் கூடினர்
உயர்ந்தவர்-பூகோளத்தில்
தமிழ்செம்மொழி கண்டீர்-தமிழ்
கோட்டை எங்கும் தமிழ் எதிலும்-தமிழ்
கணனி இணையம் - தமிழ்
அமுதம் கடைந்திடுவீர்
கோடான கோடி வந்தனங்கள்
முதல்வருக்கே

க.கனகராசா
நல்லூர்

### புரிந்திடு

கபட நாடகம் ஆடும்
கூட்டத்தினைப் பார்
கரைவு கொண்ட மனங்களின்
நிகழ்வுகளைப் பார்
எம் தமிழை கொல்வதற்காய்
எத்தனை ஏற்பாடுகள்
காற்றிலே வாழும் தமிழ்
கரையாத உருவமடா
தாய் பிள்ளை உறவை
பிரித்து வைக்காதீர்

மருதங்கேணியூரான்.

## மௌனத்தின் தேடல் - 26




### தமிழை காத்திடும் தலைவரே

அறிஞர்கள் கூடிய
அறிவொளி மேடையில்
காண்கின்றேன் ஒளி
அதுவே தமிழ்மொழி
அதுதான் உலகின் செம்மொழி
தமிழைக் காத்திடும் தலைவரே
தமிழ் இனத்தைக் காத்திடுவீரே

நா.தளையசிங்கம்
கொக்குவில்

### வெற்றிப் படைப்பு

செம்மொழி எங்கள்
செந்தமிழ் மொழி
செம்மைபெற
உழைத்த - எம்
சொந்தங்கள்
செங்குருதி சிந்தி
செத்துமடிந்திட
கூடிச் சதிசெய்த
முத்தமிழை விற்றவரின்
வெற்றிப் படைப்பு

இனுவை
சுகந்தி

### செந்தமிழோசை

செந்தமிழின் சீமையினை சீர் தூக்கி
பாராட்டும் ஓர் விழா!
சிற்பியின் கைவண்ணத்தில்
சிலையாகும் கல்போல
செஞ்சொற் செல்வர்களை
வளர்த்தெடுத்த செந்தமிழே!
கலைஞர்கள் பலர் கூடி
உனைப்போற்றும் இவ்வேளை
பாரில் உள்ளோர் போற்றட்டும்
உன் தீந்தமிழை

விஜிதா
மயிலிட்டி

முத்தமிழ் வித்தகர் தலைமையில்
முத்தான தமிழுக்கு முடி சூட
உலகச் செம்மொழி மகாநாடு மேடையில்
உலக மூதறிஞர்கள் முழங்கிடும் செந்தமிழ்
செம்மொழியே எங்கள் தமிழ்மொழியாம்

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்
நாயன்மார்க்கட்டு.

### செம்மொழி

முத்தமிழ் முதல்வரே
முத்துவேல் கருணாநிதியே - இல்லை
சோனியாவின் சரணாகதியே
தமிழ் மொழி செம்மொழிதான் - இங்கு
தமிழினம் என்ன செம்மறியா?
தமிழ் வளர்த்தால் - என்ன
தமிழினம் வாழ்ந்திடுமா

பற்றூரான்
பருத்தித்துறை

### சொங்குருதி மாநாடு

அன்று நம் மண்ணில்
செங்குருதி மாநாடு
இன்று கோவையிலே
செம்மொழி மாநாடு
நம் இனத்தை
செங்குருதியில்
தோய்த்த செம்மலுக்கு
ஏன்இந்த வீராப்பு

அ.அஜந்தன்
சுந்தர்மடம்

### உணர்வு உண்டாக்கனும்

உலகில் வாழும் தமிழர்களும்
உரிமைகொண்டு வாழ்ந்திடவாய்
உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு
உறுதியான உணர்வு உண்டாக்கனும்

தாங்கத் தமிழன்
காரைநகர்

தமிழனின் பக்கவேர்கள்
சிதைக்கப்படும்போது
கைகட்டி நின்றவர்கள்
ஆணிவேர் தாம் என
அவைவைத்து
கைதட்டா? - இது
உலகத் தமிழின் மாநாடு அல்ல
கோவைத் தமிழரின் கோலாகலம்


து.துவாரகா
சங்கானை

### செம்மொழியாகிய தமிழ்மொழியாம்

செம்மொழி மாநாடு
ஆரம்ப உரையே
ஆங்கிலத்தில்.
தமிழுக்கு அங்கு
வணக்கம் அல்ல
கருணாநிதிக்கே
முகஸ்துதி
பேராளர்களே!
மொழியின் பெயரால்
வாழாமல்
மொழிக்காக வாழுங்கள்

சிவாஜினி சிவசங்கர்
சங்கானை

## மௌனத்தின் தேடல்- 27



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை


ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல.3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 09.07.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -







யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தால் யாழ். மக்களுக்கான நடமாடும் சேவை நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோன், யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா மற்றும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் உரையாற்று வதையும் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மக்களின் தேவைகள் குறித்து மக்களுடன் உரையாற்று வதையும் பொலிஸ் அத்தியட்சகர் லக்கி விஜயரட்ண உணவுப்பொருட்கள் வழங்கு வதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- அலுவலகச்செய்தியாளர்)

# ஜி.எஸ்.பி வரிச்சலுகை இழக்கப்பட்டால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும்

## ரவி கருணாநாயக்க எம்.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. சலுகையை இழப்போமானால் 74 பில்லியன் வரிச் சலுகையை இழப்பதோடு ஆடைத் தொழில் துறையை சார்ந்த பல இலட்சம் பேர் தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.



தற்போது அமெரிக்கா வழங்கி வரும் வரிச் சலுகை தொடர்பிலும் அந்நாடு மீள் பரிசீலனை செய்யப்போவதாக அறிவித்துள்ளதாகவும் இவ்வாறான நிலைமை தொடருமானால் நாடும் மக்களும் பாரிய நெருக்கடிகளை சந்திக்க நேரிடுமென்றும் அக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

உள்நாட்டில் சிங்கள மக்களை உசுப்பேத்துவதற்காக ஐ.நா. உட்பட சர்வதேச நாடுகளுக்கு எதிராக அமைச்சர்கள் விமர்சனங்களை வெளியிடுகின்றனர்.

அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்ச கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட வேண்டுமென தெரிவித்திருந்தார். இது அமைச்சரது தனிப்பட்ட கருத்தென அரசாங்கம் தெரிவிக்கின்றது.

அப்படியானால் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? அத்தோடு அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை வகிப்பவர்கள் தனிப்பட்ட கருத்துக்களை வெளியிட முடியாது. தேசியத்துவம் எமக்குத் தேவை அதை எந்தெந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும்.

அதை விடுத்து அரசியலுக்காக, தமது சொந்த நலன்களுக்காக தேசியத்தைப் பிரயோகித்து நாட்டையும் மக்களையும் நெருக்கடிகளில் தள்ளி விடுவது உண்மையான தேசியமாகாது.

உள்நாட்டில் வெளிநாடுகளுக்கு எதிராக குரல் கொடுத்து விட்டு வெளிநாடுகளுக்குச் சென்று மண்டியிடும் இரட்டை வேடப் போக்கினால் ஜி.எஸ்.பி. சலுகை உட்பட பல்வேறு வெளிநாட்டு உதவிகளை இழக்க வேண்டிய நிலை உருவாகி வருகிறது. எதிர்காலத்தில் பாரிய பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்.ஆனால் இவையனைத்தையும் கருத்தில் கொள்ளாது அரசாங்கம் செயற்படுகிறது என்றும் ரவி கருணாநாயக்க எம்.பி தெரிவித்தார். (6)

## கிரிக்கெட் போட்டி

கரவெட்டி ஜங்கரா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழாவை முன்னிட்டு வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டிகளில் கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இவ் அரை இறுதிப்போட்டி இன்று பி.ப. 3.30 மணியளவில் மாலுசந்திமைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (6-24)

## கருத்தரங்கு

(சித்தங்கேணி)

பெற்றோருக்கான கல்வி விழிப்பூட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆனைக்கோட்டை உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கே.கமலநாதனின் நெறியாள்கையில் கல்வியியற் கல்லூரி மாணவர்களின் கல்வி விழிப்பூட்டற் தெருக்கூத்து இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் , யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். இராச நாயகம் , செயற்றிட்ட உத்தியோகத்தர் எஸ்.சிவானந்தன், ஆசிரிய ஆலோசகர் ஆர். இரவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-17)

# மாளிகாவத்தைப் பிரதேசத்தில் 12 பேர்வெள்ளைவானில் கடத்தல்

(கொழும்பு)

2008ஆம் ஆண்டு முதல் கடந்த யூன் மாதம் வரை மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்கள் 12 பேர் வெள்ளை வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக ஜனநாயக உரிமைகளைக் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

8 முஸ்லிம்களும் ,4 தமிழர்களும் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக அமைப்பின் செயலாளர் மஹிந்த ஹத்தக தெரிவித்துள்ளார். கடத்தப்பட்டவர்கள் சாதாரண தொழில் செய்து வாழ்ந்து வந்தவர்கள் என அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர்கள் ஏதேனும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் , அவர்களை காணாமல் போகச் செய்தல் நாட்டின் சட்டத்தை மீறிய நடவடிக்கையாகும். அத்துடன் பாரதூரமான மனித உரிமை மீறலாகும். தவறுகளுக்கு சட்ட ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்காது இவ்வாறு செயற்படுவதன் மூலம் சட்டத்தின் ஆளுமை பாரதூரமான வீழ்ச்சியைச் சந்திக்கும் எனவும் மஹிந்த ஹத்தக குறிப்பிட்டுள்ளார் .(6)



# களவாணி

திரை விமர்சனம்



தஞ்சை மாவட்டத்திலுள்ள அந்த இரு சிற்றூர்களுக்கு இடையே அடிக்கடி பிரச்சினை.

காரணம், களவுபோன சாமி சிலை. அதிலும் களவாணித்தனம் செய்துகொண்டு திரியும் விமலுக்கும் எதிர் ஊரில் ரவுடித்தனம் செய்யும் திருமுருகனுக்கும் அடிக்கடி மோதல் . இந்நிலையில் திருமுருகனின் தங்கை ஓவியாவைக் காதலிக்கிறார் விமல். இந்தக் காதலுக்கு திருமுருகன் மட்டுமன்றி, அவர்கள் ஊரே எதிர்ப்புக் காட்டி நிற்கிறது. அதை மீறித் தனது களவாணித்தனத்தால் காதலியை விமல் கரம்பிடிப்பது, கல கல க்ளைமாக்ஸ்.


கதையில் புது விடயம் எதுவும் இல்லை. கதை சொன்ன விதத்தில் வித்தியாசம் காட்டியிருப்பதுதான் 'களவாணி' ஸ்பெஷல். முதல் காட்சியில் சிறுவர்களின் கிரிக்கெட் போட்டி நடக்கிறது. இரு ஊர் சிறுவர்கள் மோதிக்கொள்ளும் போதே ஊர் பிரச்சினையை ஜாலியாக சொல்லப் போகிறார்கள் என்பதை சூசகமாக சொல்கிறது படம். வன்முறை, திடுக்கிடும் காட்சிகள் இல்லாமல் அதை கடைசிவரை மெயின்டைன் செய்திருப்பது பேஷ் பேஷ்.

டுபாயில் அப்பா இளவரசு சம்பாதித்துப் பணத்தை அனுப்புகிறார். அதை அம்மா சரண்யாவை மிரட்டி விமல் வாங்குவது, தனது நண்பர் குழுவுடன் சேர்ந்து கஞ்சா கருப்பை கலாய்ப்பது, ஒரே பஸ்சில் பயணிக்கும் இரண்டு பெண்களை ஓரிடத்தில் நின்றபடியே ப்ராக்கெட் போடுவது, காதலிக்கு உதவ அவரது பாடசாலைப் பாடத்தை தங்கையை வைத்து எழுதச் செய்வது, தங்கைக்காக அப்பா கொண்டு வந்த உடைகள், மேக் அப் பொருளைதான் வாங்கியதாகக் காதலியிடம் தருவது என அக்மார்க் களவாணித்தன நடிப்பில் க்ளிக் ஆகிறார் விமல்.

'பசங்க' படத்துடன் ஒப்பிடும்போது நடிப்பில் புரமோஷன் வாங்கியிருக்கிறார். புதுமுகம் ஓவியா, அச்சு அசலாய் கிராமத்து மாணவி. காதல் வயப்பட்டு உன்னை கட்டிக்கிறேன் என சொல்லும்போது பைக்கென இளசு இதயங்களில் டேரா போடுகிறார். புதுமுகம் திருமுருகன், கோலிவுட்டில் ரவுண்ட் அடிப்பார். அப்பாவித்தனமாய் விமல் கோஷ்டியிடம் சிக்கி, சுக்கு நூறாகும் கரக்டரில் சிரிக்க வைக்கிறார் கஞ்சா கருப்பு. மகனின் தில்லுமுல்லு செயல்களையும் நியாயமாக்கும் பாசிட்டிவ் அம்மாவாக பளிச்சிடுகிறார் சரண்யா. இளவரசு, சூரி என அனைவருமே கச்சிதம்.

முதல் பாதியில் சில காட்சிகளுக்கு கத்தரி போட்டிருக்கலாம். அதிலும் ஓவியா பாடசாலைக்கு செல்வதும் விமல் அவரை வழிமறிப்பதும் என அடிக்கடி காட்டுவதை தவிர்த்திருக்கலாம். திருமுருகன் யாருக்கு என்ன உறவு என்பது இடைவேளைக்கு பின்பே தெரிகிறது. எஸ்.எஸ். குமரனின் இசையில் பாடல்கள் சுமார் ரகம். பின்னணி இசையில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். ஓம்பிரகாஷின் ஒளிப்பதிவு கதையோடு கைகோர்த்துள்ளது. இயக்குநர் சற்குணத்துக்கு இது முதல் படம். யதார்த்த சினிமாவை இப்படியும் தரலாம் என நினைவூட்டியிருக்கிறார்.

# விஜய்யின் வேலாயுதம் படத்தின் கதை!




அடுத்தடுத்து தோல்விப் படங்களை கொடுத்து வரும் நடிகர் விஜய் அடுத்து நடிக்கவிருக்கும் படம் வேலாயுதம். ஒஸ்கார் ரவிச்சந்திரன் தயாரிக்கும் இப்படத்தினை டைரக்டர் ஜெயம்ராஜா இயக்குகிறார். நாயகியாக ஜெனிலியா நடிக்க உள்ளார். பிரமாண்ட அளவில் தொடக்க விழாவை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது வேலாயுதம் அணி.

இந்நிலையில் வேலாயுதம் படத்தின் கதை பற்றிய புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜெயம்ராஜாவும், விஜய்யும் ரீ- மேக் பிரியர்கள். விஜய்யை பொறுத்தவரை அவ்வப்போது காலை வாரிவிட்டாலும் தொடர்ந்து ரீ-மேக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். ஜெயம் ராஜாவுக்கு ரீ-மேக் தான் ரொம்ப ராசி. இப்போது அவர் வேலாயுதம் படத்திற்காக தேர்ந்தெடுத்திருக்கும் கதையும் ரீ - மேக்தான் என்கிறது விபரமறிந்த கோடம்பாக்கம் வட்டாரம்.

மறைந்த இயக்குநர் திருப்பதிசாமி சில ஆண்டுகளுக்கு முன் தெலுங்கில் இயக்கிய 'ஆசாத்' என்ற படத்தைத் தழுவித்தான் வேலாயுதத்தை உருவாக்கப்போகிறாராம்ராஜா. இந்தியன், முதல்வன், அந்நியன் என்று ஷங்கரின் கைவண்ண கலவைதான் இந்த ஆசாத் படம் என்று தெலுங்குப் பட வட்டாரம் சொல்கிறது. அப்போ... படத்தோட கதை என்னவாக இருக்கும்னு புரிகிறதா?

# அஜித்தின் 50 ஆவது பட நாயகி அனுஷ்கா

அஜித்தின் 50 ஆவது படமான மங்காத்தாவை க்ளவுட் நயன் மூவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்தப் படத்தை வெங்கட் பிரபு இயக்குகிறார். மங்காத்தா படத்திற்காக அனுஷ்காவை ஒப்பந்தம் செய்திருக்கிறார் வெங்கட் பிரபு. இரண்டு நாட்களுக்கு முன் அனுஷ்காவை தொடர்புகொண்டு, இந்த ஒப்பந்தத்தை உறுதி செய்து கொண்டுள்ளார் வெங்கட்பிரபு.



அருந்ததீ படத்திற்குப் பின்னர் கோலிவுட்டில் மவுசு ஏகத்திற்கும் அதிகரித்திருக்கும் அனுஷ்காவிற்கு, அஜித்தின் 50 ஆவது படத்தில் நடிப்பது ஒரு நல்ல வாய்ப்பு என அனுஷ்காவின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முன்னணி நடிகர்கள் மற்றும் டைரக்டர்களின் தெரிவும் கவர்ச்சியிலும் நடிப்பிலும் அசத்தும் அனுஷ்கா தான் என கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




# வடிவேலுவைக் காதலிக்கிறார் தமன்னா

இரட்டை சந்தோஷம், தில்லாலங்கடி ரொம்ப நல்லா வந்திருக்கு. படத்தை சன் பிக்சர்ஸ் வெளியிடுகின்றது. அன்லிமிடெட் சிரிப்புடன் பேசத் தொடங்குகிறார் இயக்குநர் ராஜா. (கிட்டத்தட்ட ஐந்தாவது ரீ-மேக் படம் முடிந்துவிட்டீர்கள். ரீ-மேக் இயக்குநர் முத்திரையை மாற்றும் எண்ணம். எழவே இல்லையா?) ஒரு ஹிட் படத்தை ரீ-மேக் செய்கிறது கொலைக் குற்றமா என்ன? சொல்லப் போனா இங்கே நிறையப் பேர் வெவ்வேறு கதைகளைச் சுட்டு திருட்டுத்தனமா ரீ-மேக் செய்கிறார்கள் . நான் பிற மொழிகளில் வெற்றி அடைந்த படங்களின் கதையைக் காசு கொடுத்து வாங்கி ரீ-மேக் செய்கிறேன்.



எனக்கும் அவர்களுக்குமான வித்தியாசம் இது தான். இங்கே வருடத்துக்கு ஐந்து சதவிகிதப் படங்கள் தான் வெற்றி அடைகின்றதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் அந்த ஐந்து சதவிகிதத்தில் என் படமும் இருக்கு என்பதில் நிச்சயம் எனக்குப் பெருமை!

தில்லாலங்கடி படத்தில் வடிவேலுவை தமன்னா வான்டடா காதலிக்கிறாங்களாமே?

வடிவேலு ஒரு ஜீனியஸ். டைமிங் காமெடியில் பின்னி எடுக்கிறார் மனுஷன் . படத்தில் காமெடியோடு தமன்னாவைக் காதலிக்கவும் செய்கிறார். அவங்க இரண்டு பேருக்குமான லவ் டிராக்ல ஒரு ஆரம்பம், பிரச்சினை முடிவுன்னு எல்லாமே பக்காவா வரும். அந்தக் கறுப்பனையா காதலிக்கிறே? ன்னு தமன்னா கிட்ட கேக்கிறவங்ககிட்ட கறுப்பு என் தலை முடியில் இருக்கு. கருவிழியில் இருக்கு. கறுப்பு நெருப்புன்னு உருகுவாங்க தமன்னா. நிச்சயம் இந்த கெமிஸ்ட்ரியும் பின்னி எடுக்கும். எந்த ஒரு ஹீரோவும் செய்யத் துணியாத பைச்சாகசம் ஒன்றும் வடிவேலு செய்து இருக்கிறார்!

ஜெயம் ரவியும் கூடிய சீக்கிரமே படம் இயக்கப்போறார் என்று ஒரு பேச்சு இருக்கு. நீங்கதான் அவருக்குக் குருவா?

நீங்க அவரைத்தான் கேட்க வேண்டும். ஆனால் அதற்கான தகுதிகளை எல்லாம் அவன் வளர்த்துக் கொண்டு வாறான். எங்க ஒட்டுமொத்தக் குடும்பமே சந்தோஷமா இருந்த தருணங்களில் பேராண்மை பார்த்த நாளும் ஒன்று. துருவன் என்ற அந்த கரக்டரை அவன் அத்தனை அழகா தாங்கிப் பிடிச்சிருந்தான். இப்ப கூட தில்லாலங்கடி படத்தின் க்ளைமாக்ஸுக்கு முந்தைய ஃபாஸ்ட் பீட் பாடலை சிம்பு பாடினா நல்லா இருக்கும் என்று நினைச்சு அவனே சிம்புகிட்ட பேசி ஓ.கே. வாங்கிப் பாட வைத்துவிட்டான்.

எந்தப் படத்தில் வேலை பார்த்தாலும் ஒரு நடிகன் என்பதைத் தாண்டி அந்தப் படத்துக்குத்தன்னால் என்ன எல்லாம் அலங்காரம் செய்ய முடியும் என்று மெனக்கெட ஆரம்பித்துவிட்டான். நான் சொல்கிறதை கேளுடா என்று சொன்ன நிலைமை மாறி இப்போ நீ சொல்றதையும் கேட்டுக்குறேன் என்று வந்து நிக்கிறான்!

மேலும் படங்களுக்கு... ஒரு சோதனையான காலகட்டத்தில் விஜய்க்கு நீங்கள் வேலாயுதம் படம் தயாரிக்கிறீர்கள். ரீ-மேக் இல்லாமல் உங்கள் சொந்தக் கதை. எப்படிச் சமாளிக்கப் போறீங்கள்?

அவர் 48 ஆவது படம் நடித்துக் கொண்டு இருக்கும் போதே 51 ஆவது படம் சேர்ந்து செய்வோம் என்றார். அது கொஞ்சம் மாறி 52 ஆவது படமா அமைந்திருக்கு. விஜய்யோட அஸ்திவாரம் ரொம்பப் பலமானது. இதுக்கு முன்னரும் இது போன்ற ஒரு சோதனையான காலகட்டத்தைக் கடந்து தன்னை யார் என்று நிரூபித்தவர் அவர்.

வேலாயுதம் நிச்சயம் அவரோட வெற்றிப் பட்டியலில் இடம் பிடிக்கும். மக்கள் பிரச்சினைதான் கதை. அரசியல் படமா இல்லை என்பதை உங்கள் யூகத்துக்கே விட்டுவிடுகிறேன்!

# தமிழீழத்துக்காக ஆட்சியை இழக்க தயாராக இருந்தேன்

## ஜெயலலிதாவின் அறிக்கைக்கு கருணாநிதி பதில்

(சென்னை)

இலங்கையில் தமிழ் ஈழம் மலரும் என்றால் அதற்காக ஆட்சியை இழக்கக் கூட நாங்கள் தயார் என அறிவித்தவன் நான். இதை உண்மையிலேயே இலங்கைத் தமிழர்களுக்காகப் பாடுபடுபவர்கள் உணர்வார்கள் என முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்ட கேள்வி-பதில் அறிக்கை வருமாறு,

ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் உங்களை சதிச் செயல் புரியும் மரண வியாபாரி என்று வர்ணித்து கருணாநிதியும் ஒரு போர்க்குற்றவாளி என்றும் குறிப்பிட்டிருக்கிறாரே?

ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் பிரபாகரனை இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் சட்டசபையில் கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி ஜெயலலிதா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

ஒரு யுத்தம், ஒரு போர் நடக்கும் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இதில் எந்த நாடும் விதிவிலக்கல்ல. எங்கே யுத்தம் போர் நடந்தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இன்று இலங்கையில் என்ன நடக்கிறதென்றால் இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பான இடத்திற்குச் செல்லவிடாமல் விடுதலைப் புலிகள் அவர்களை பிடித்து வைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக இராணுவத்தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என கடந்த ஆண்டு அறிக்கை விடுத்த ஜெயலலிதாவின் பேனா முனையின் ஈரம் இன்னும் காய்ந்திருக்காது.

இலங்கையில் தமிழ் இனப் படுகொலையைக் கண்டித்து போர் நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றிய போது இதே ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கு ஆத ரவாக கருணாநிதி செயல்படுகிறாரோ என்ற சந்தேகம் தான் தமிழக மக்கள் மனதில் எழுந்துள்ளது. இலங்கையில் தற்போது நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை என்று கூறியதோடு இலங்கையில் நடக்கும் யுத்தம் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் என்னும் பயங்கரவாத இயக்கத்திற்கு எதிரான யுத்தம் என்றும் அதனால் தான் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் இறந்ததற்கு கருணாநிதி இரங்கற்பா எழுதுகிறார் என்றும் ஜெயலலிதா அறிக்கை விடுத்தார்.

கடந்த ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்காக சட்டசபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது இலங்கையிலே தமிழீழம் மலரும் என்றால் அதற்காக ஆட்சியை இழக்கக் கூட நாங்கள் தயார் என அறிவித்தவன் நான். இதை உண்மையிலேயே இலங்கைத் தமிழர்களுக்காகப் பாடுபடுபவர்கள் உணருவார்கள். சந்திரஹாசன் எனக்கெழுதிய கடிதத்தில், ஈழத் தமிழர் இன்னல், அதையொட்டி தமிழகத்தில் கொந்தளிப்பு இவையெல்லாம் தங்களைப் பாதிக்கும் என்பதை அறிவோம். ஆயினும் தாங்கள் ஆட்சியில் இருப்பதால் தான் இலங்கையில் சிங்களப் பேரினவாதம் ஓரளவுக்காவது அடக்கி வாசிக்கிறது. உலகத் தமிழர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிட முடிகிறது என எழுதினார். இதை மனதிலே கொண்டு தான் சில ஜீவன்களின் விமர்சனங்களை மறந்து விடுகிறேன். இவ்வாறு முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். (6)




## பீகாரில் படகு கவிழ்ந்ததில் 43 பேர் பலியாகியுள்ளனர்

(பெட்டியா)

பீகாரின் வடக்கு சாம்பரான் மாவட்டத்தில் காண்டக் நதியில் படகு கவிழ்ந்ததில் நேற்று முன்தினம் இரண்டு குழந்தைகள் உட்பட 43 பேர் பலியாகினர்.

65 பயணிகளுடன் ரான்ஹா கிராமத்திலிருந்து பகவான்பூர் கிராமத்திற்கு சென்ற படகு கோர்யா காட் என்ற இடத்தில் கவிழ்ந்தது.

20 முதல் 25 பேர் வரை நீந்தி கரை சேர்ந்தனர். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடுத் தொகையாக வழங்கப்படும் என்று பீகார் மாநில அரசு தெரிவித்துள்ளது. (6).

## சிறந்த அமெரிக்க ஜனாதிபதிகளுக்கான தரவரிசையில் ஒபாமாவுக்கு 15 ஆவது இடம்

(வோஷிங்டன்)

புதிதாக வெளியிடப்பட்ட சிறந்த அமெரிக்க ஜனாதிபதிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் பராக் ஒபாமாவுக்கு 15 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் 238 அறிஞர்களிடம் மேற்கொள்ளப்பட்ட கருத்து கணிப்பின் முடிவை சியான கல்லூரி வெளியிட்டுள்ளது. இதில் 15 ஆம் இடத்தைப்பிடித்துள்ளார் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் 13 ஆவது இடத்தையும் ரீகன் 18 வது இடத்தையும் பெற்றுள்ளனர்.

கடந்த 1982 இல் இருந்து நடத்தப்பட்டுவரும் இந்த கருத்து கணிப்பில் இம்முறையும் முதலாவது இடத்தை வசப்படுத்தியிருக்கிறார் பிராங்க்ளின் டி.ரூஸ்வெல்ட்.

பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், டெடி ரூஸ்வெல்ட் ஆப்ரஹாம் லிங்கன், ஜார்ஜ் வோஷிங்டன் மற்றும் தோமஸ் ஜெஃபர்ஸன் ஆகியோர் முதல் ஐந்து இடங்களில் உள்ளனர்.

இந்தத் தரவரிசைப் பட்டியலை வெளியிட்ட சியான கல்லூரியில் புள்ளியியல் பேராசிரியர் டக்ளஸ் லன்ஸ்டார்ம் ஒபாமா ஓரளவு நன்மதிப்பு பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

இதேவேளை கடந்த 2002இல்23 ஆவது இடத்தில் இருந்த ஜோர்ஜ் புஷ் இப்போது 39 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார் என்று தெரி விக்கப்படுகிறது. (6)

## நடிகை விஜயசாந்தி கைது

(ஐதராபாத்)

கலவரத்தைத் தூண்டும் வகையில் பேசியதாக நடிகையும் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சியின் எம்.பி.யுமான விஜயசாந்தி நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள் ளார்.

ஆந்திராவின் தெலுங்கானா பகுதியில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான கட்சி கூட்டத்தில் கடந்த வியாழக்கிழமை பேசிய விஜயசாந்தி தனி தெலுங்கானாவுக்கு எதிரானவர்களை வெட்டி சாய்க்க வேண்டும் என ஆவேசமாக பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

விஜயசாந்தியின் இந்த பேச்சு ஆந்திராவின் தெலுங்கு தனியார் செய்தி அலைவரிசைகளில் ஒலிபரப்பாகியுள்ளது.

இதையடுத்து அவர் மீது பொதுமக்களை கலவரத்துக்கு தூண்டும் வகையில் பேசியதாக வழக்கு பதிவு செய்யுமாறு மாநில தேர்தல் அதிகாரி சுப்பா ராவ் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து 505 (2), 153 (ஏ) ஆகிய பிரிவுகளின்கீழ்பஞ்சராஹில்ஸ்பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.



விஜயசாந்தியின் பேச்சு தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில் அவர் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்ற நிலை இருந்தது.

இந்நிலையில் விஜயசாந்தியை ஆந்திரா பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்த னர். அப்போது பஞ்ரா ஹில்ஸ் பகுதியில் உள்ள அவரது வீட்டின் முன்பு பொலிஸுக்கு எதிராக டி.ஆர்.எஸ்.கட்சியினர் 200 இற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விஜயசாந்தியை கைது செய்தால் தெலுங்கானா பகுதி முழுவதும் போராட்டத்தில் ஈடுபட தெலுங்கானா ராஷ்டீரியா சமிதி கட்சி முடிவு செய்துள்ளது. இதனால் தெலுங்கானா பகுதி முழுவதுமே பதற்றம் ஏற்பட்டுள்ளது. (6)


## காஷ்மீரில் தீவிரவாதிகள் ஊடுருவல்; துப்பாக்கிச் சூட்டுக்கு இருவர் பலி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்தில் ஊடுருவல் நடத்த முயன்ற தீவிரவாதிகளுடன் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கி சண்டையில் 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

காஷ்மீர்-மாநிலத்தில் பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள் அவ்வப்போது இந்திய எல்லைக்குள் ஊடுருவல் நடத்துவது நடைபெற்று வருகிறது. இதன்காரணமாக அப்பகுதியில் இந்திய பாதுகாப்புப் படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நவ்காம் என்னும் இடத்தில் தீவிரவாதிகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவல் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக அவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். தீவிரவாதிகளும் திருப்பிச் சுட்டதால் அங்கு பலத்த துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. சம்பவத்தில் 4 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அப்பகுதியில் இராணுவம் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது. (6)



ஜப்பான் தலைநகரான டோக்கியோ நகரில் தி டாவ்ன் ஆப் தி டைனோசர் எனும் தலைப்பில் டைனோசர் உலக கண்காட்சி நடைபெறுகிறது. அங்கு மறைந்த பெரிய டைனோசரின் எலும்புகள் கொண்டு டைனோசர் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஆந்திராவில் மாவோ தீவிரவாதிகளின் முக்கிய தலைவர் சுட்டுக் கொலை

ஆந்திராவில் மாவோ தீவிரவாதிகள் முக்கியதலைவர் உட்பட 2 பேரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.


மகாராஷ்டிராவில் இருந்து ஆந்திராவுக்கு தீவிரவாதிகள் வருவதாக கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து அடிலாபாத் மாவட்டத்தில் உள்ள வாங்கிடி காட்டுப் பகுதியில் பொலிஸசார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இரவு 11 மணியளவில் பொலிசார் மீது தீவிரவாதிகள் திடிரென துப்பாக்கிச்சூடு நடத்தினர் பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்த சண்டை ஒரு மணி நேரம் நீடித்தது. கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் சடலத்தை கைப்பற்றி பொலிசார் விசாரணை நடத்தியபோது ஒருவர் சிருகுரி ராஜ்குமார் என்ற ஆசாத் என்பது தெரிந்தது.

ஆசாத்துடன் கொல்லப்பட்ட மற்றொரு தீவிரவாதி யார் என்று தெரியவில்லை. அவரை அடையாளம் காணும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

ஆசாத்தின் சடலத்தை ஐதராபாத் எடுத்துச் செல்ல அனுமதிக்கும்படி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப் போவதாக தீவிர வாதி ஆதரவாளரும் புரட்சிப் பாடல்களை எழுதுபவருமான வரவரா ராவ் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், துப்பாக்கிச் சண்டையில் ஆசாத்தை பொலிஸார் கொல்லவில்லை. அவரை ஏற்கனவே பிடித்து வைத்திருந்து காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று பொலிஸ் என்கவுன்டரில் சுட்டுக் கொன்றுள்ளனர் என்றார். (6)



சித்த மருத்துவத்துறையின் 25 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் ஒழுங்குசெய்த நிகழ்வுகளில் ஒன்றான இரத்ததான நிகழ்வில் வைத்தியர் ஒருவர் இரத்தப் பரிசோதனை செய்வதையும் இரத்தம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மரபணு சோதனை மூலம்
# மனித வாழ்நாள் கண்டுபிடிப்பு

மரபணு சோதனை மூலம் ஒரு மனிதன் வாழ்நாளைக் கண்டு பிடிக்க முடியும் என்று அமெரிக்க பேராசிரியர்கள் கண்டுபிடித்துள்ளனர். மனிதன் பிறக்கின்ற போதே அவனது இறப்பு நிச்சயிக்கப்படுகிறது.

ஆனால் அவன் எத்தனை நாள் உயிருடன் வாழ்ந்துவிட்டு இந்த மண்ணுலகை விட்டு மறைவான் என்று இதுவரை யாராலும் கணக்கிட முடியாமல் இருந்தது.

ஆனால் தற்போது ஒரு மனித உடலில் உள்ள மரபணுக்களை வைத்து அவனது வாழ்நாள் கணக்கிடமுடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆய்வை அமெரிக்காவின் பாஸ்டன் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த பேராசிரியர்கள் பயோலா செபாஸ்தியானி, தாமஸ் பெர்ல்ஸ் ஆகியோர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.

இவர்கள் நியூஇங்கிலாந்து பகுதியில் 100 ஆண்டுகள் வாழ்ந்தவர்களை தேர்ந்தெடுத்து அவர்களிடம் பலபரிசோதனைகளை மேற்கொண்டனர்

அப்போது மரபணுக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மனிதனின் வாழ்நாளை கணிக்க முடியும் என்றும் தெரியவந்தது. சில மரபணுக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிக அளவில் தருகின்றன. இதன்மூலம் வாழ்நாள் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதையும் அறியமுடிந்தது.

இந்த ஆய்வின் மூலம் ஒரு மனிதனின் ஆயுட்காலத்தை 77 சதவீத அளவு துல்லியமாக கணக்கிட முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (6)

# மட்டக்களப்பில் புதையல் எடுப்பதற்கான முயற்சிகள்
## அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் அமைந்துள்ள மாங்கேணி மற்றும் புல்லாவி ஆகிய இடங்களில் பௌத்த பிக்கு தலைமையில் புதையல் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்கூறப்பட்ட இடங்களில் புதையல் எடுப்பதற்காக பௌத்த பிக்கு தலைமையில் ஒரு குழுவினர் ஓரிரு நாட்களாக முயற்சிகளை மேற்கொள்வதாக அங்குள்ள மக்கள் தன்னிடம் தொடர்புகொண்டு தெரிவித்ததாக கூறியுள்ளார்.

மேலும் அங்குள்ள இராணுவத்தினரே இவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் ஏனைய உதவிகளையும் செய்துகொடுப்பதாகவும் மக்கள் நடமாட்டமற்ற காட்டுப் பகுதிகளிலேயே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டவிரோத முயற்சிகளை சம்பந்தப்பட்டவர்கள் உடன் தடுத்து நிறுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (6)

# யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பாக
# அமெரிக்க தூதுவருடன் தமிழ்பிரதிநிதிகள் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்கா, பிரித்தானியா ஆகியவற்றில் செயல்படும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான அமெரிக்க தூதுவர் ஸ்டீபன் றெப்பையும் அவரது அலுவலர்களையும் இந்தவாரம் ராஜாங்க திணைக்களத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இனக்கொலைக்கு எதிரான தமிழ் மக்கள் அமைப்பு, தமிழ் அரசியல் நடவடிக்கை சபை ஆகியவற்றின் அமெரிக்க, பிரித்தானிய பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பாக அமெரிக்க தூதுவரை சந்தித்துள்ளனர்.

இச்சந்திப்பின் போது, இலங்கையின் உள்ளக முயற்சிகளின் நம்பகத் தன்மை பற்றியும் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆகியவற்றின் வெளிவாரி முயற்சிகளின் முன்னேற்றம் மற்றும் வடக்குக் கிழக்கை இராணுவ மயப்படுத்தல், மீள்குடியமர்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம், இலங்கை அரசு நியமித்த ஆணைக்குழுவின் எதிர்பார்ப்புகள், தமிழ் யுத்தக் கைதிகளின் நிலைமை ஆகியன பற்றியும் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)


# இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



www.inuvilkanthan.com

## ஒருமுகத் திருவிழா

## இணுவில் நொச்சியம்பதி கந்தவேள் கட்டளைக்கலிப்பா

இணுவில் நொச்சியம்பதி கந்தன் மஹோற்சவம்
எண்ணரியின்று பதினெட்டாம் திருவிழாவிலே
துணையாய் ஐங்கரன் சங்கரன் போல் வேளும்
தோன்றியே ஒரு குதிரைமேல் வருகிறான்
அணையும் காட்சியோ வேலுடன் மயிலுமாய்
அழகு செய்திட ஐயன் முருகவேள்
இணையும் நாவல் மரத்தினிற் காட்சியும்
இனிது சொல்லும் கதையும் அறிவீரே

அன்று நாவல் மரம் மேல் முருகனார்
ஔவை கேட்ட பழத்தினைப் போடவும்
நன்று என்றே ஔவைசுவைத் துண்ண
நாடி ஊதியுண் பழம் சுட்ட பழமென்ன
நின்று வாடிடும் ஔவைக்கு முருகனார்
நீடிலை வடிவேலுடன் நின்றதை
இன்று நேற்றல்ல என்றுமில் விழாவிலே
எடுத்துக் காட்டுமிது நாவற்பழவிழா

ஆலவட்டம் கொடி குடை சகிதமாய்
அசைந்து மேளங்கள் தாளங்கள் ஆர்த்திட
தீபம் காட்டியே அந்தணர் அர்ச்சிக்க
சிவநாதா முருகா என அடியார் போற்ற
கோல மாகவே குஞ்சரி வள்ளியோடு
குலவி வேலன் கொலுவாய் வலம் வரும்
ஞாலம் போற்றிடு ஆண்டுதோறும் நிகழ்
நல்விழாவினை நாடிக்கண் டும்மினே
முருகா உனைப் பாடவைத்தாய்

சித்திரங்கள் கதை சொல்லும் கோபுரம்
சென்று வான்தொடும் இணுவைப் பெருங்கோயில்
அத்தனாம் கந்தசுவாமி குகனுக்கு
ஆயிரம் நாமம் அர்ச்சித்தார் அந்தணர்
பக்தி மிக்க அடியார் திருக்கூட்டம்
பண்ணின் பாடல் பல புகழ்சூட்டினார்
உத்தமனான பதினெட்டாம் விழாயானும்
உணர்ந்து பாமாலை ஓதிப் புனைந்தேனே

(1709)

இணுவில், முதுபெரும்புலவர் கலாபூஷணம்
புலவர் மணி ஏவை.க. சிற்றம்பலம்


# விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

வான் விபத்தின் போது படுகாயமடைந்த வயோதிபப் பெண் சிகிச்சை பலனின்றி ஒன்பது நாட்களின் பின்னர் நேற்று நண்பகல் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தில் வல்வை வீதி, அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சிவராசா கமலம் (வயது -56) என்பவரே மரணமடைந்துள்ளார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, பிரஸ்தாப நபர் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் வீட்டு வாசலில் நின்றவேளை ஐஸ்கிறீம் வான் ஒன்று வல்வை வீதி ஊடாக வந்து கொண்டிருந்தபோது இடப் பக்கமாக நின்ற வயோதிபப் பெண் மீது திடீரென மோதியுள்ளது. இவ் வாகனத்தை செலுத்தி வந்த சாரதி கையடக்கத் தொலைபேசி கதைத்த வண்ணம் வாகனத்தை செலுத்தியதாகவும் திசைமாறியே மோதியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட அச்சுவேலிப் பொலிஸார் சாரதியை கைது செய்துள்ளனர். (6-7)



88ஆவது அனைத்துலக கூட்டுறவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையால் நடாத்தப்பட்ட மரதன் ஓட்டமும் சைக்கிளோட்டப் போட்டியும் நேற்று சங்கத்தின் முன் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி போட்டிகளை யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ராஜாராம் ஆரம்பித்து வைப்பதையும் வெற்றியீட்டிய போட்டியாளர்கள் விருந்தினருடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## செம்மொழி மாநாட்டு தீர்மானங்களை நிறைவேற்றுவது குறித்து ஆலோசனை

(சென்னை)

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவது பற்றி அமைச்சர்கள் , அதிகாரிகளுடன் முதல் அமைச்சர் கருணாநிதி நேற்று ஆலோசனை நடத்தினார்.

சென்னைக் கோட்டையில் உள்ள செம்மொழி தமிழாய்வு நூலக அரங்கில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு கருணாநிதி தலைமை தாங்கினார்.

இதில் சம்பந்தப்பட்ட அனைத்துத்துறை செயலாளர்கள் ,அதிகாரிகள் கலந்துகொண்டனர். கோவை மாநாட்டு தீர்மானங்களை ஒவ்வொரு துறையும் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை கருணாநிதி வழங்கியதாக கூறப்படுகிறது. (6)

## இராணுவ வாகனம் தடம்புரண்டு 13 சிப்பாய்கள் படுகாயம்

கெக்கிராவா பகுதியில் வேகமாக சென்ற இராணுவ வாகனம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 13 இராணுவ சிப்பாய்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்று காலை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த படையினர் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(6)

## கொங்கோ நாட்டில் விபத்து; 200 பேர் உடல் கருகிப் பலி

(கின்சாசா)

கிழக்கு ஜனநாயக கொங்கோவில் தெற்கு கிவு மாகாணத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு எண்ணெய் தாங்கி லொறி ஒன்று வெடித்துச் சிதறியதில் பயங்கர விபத்து ஏற்பட்டது. டான்சானியாவில் இருந்து எண்ணெய் தாங்கி ஒன்று வந்து கொண்டிருந்தது.



சாங்கே என்ற கிராமத்தின் அருகே லொறி வந்து கொண்டிருந்த போது விபத்து நடந்துள்ளது.

விபத்தில் சிக்கி 200 பேர் உடல் கருகி இறந்தனர். 100 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அங்கு பெருக்கெடுத்து ஓடிய எண்ணெயை சேகரிக்க முற்பட்ட மக்கள் சிலரும் இறந்தனர்.

இதேவேளை மீட்பு பணிகளில் ஈடுபடச் சென்ற ஐ.நா பாதுகாப்பு படையினர் சிலரை காணவில்லை எனவும் அவர்களும் தீ விபத்தில் சிக்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

100 பேர் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். போதிய மருத்துவ வசதியில்லாததால் பாதிக்கப்பட்ட வர்கள் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)


## மோட்டார் சைக்கிளில் சென்றோரால் பெண்ணின் நகை அபகரிப்பு

(கல்வயல்)

கல்வயல் பெருங்குளம் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பெண் ஒருவரின் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் வழி மறித்து அறுத்துச் சென்றுள்ளனர்.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு இப் பெண் வீட்டுத்தேவைக்காக குடி நீர் அள்ளிவிட்டு வீடு திரும்புகையில் இச்சம்பவம் நடந்தாக தெரிவிக்கப்படுகிறது. (6-31)

## 79 வயது தாத்தாவின் சாதனை



(லண்டன்)

இங்கிலாந்தில் 79 வயது தாத்தா அப்பாவாகி சாதனை படைத்துள்ளார். அவரது பெயர் ரேமண்ட். கடை வைத்திருக்கிறார்.

ஓராண்டுக்கு முன் 25 வயது பெண்ணுடன் இவருக்கு காதல் மலர்ந்தது. சேர்ந்து வாழ தொடங்கினர்.

சமீபத்தில் மகன் பிறந்தான். 79 வயதில் குழந்தை பெற்றதன் மூலம் இங்கிலாந்தின் மிக வயதான அப்பா என்ற சாதனை ரேமண்ட் வசமாவிட்டது.

இதற்கு முன் 76 வயதில் கடந்த ஆண்டு குழந்தை பெற்ற டென்னிஸ்தான் சாதனையாளராக இருந்தார். அவரை ரேமண்ட் பின்தள்ளி விட்டார். இது குறித்து தெரிவித்த அவர், உலகின் மிக அதிர்ஷ்டசாலி நான். மகன் வருகை என்னை 10 அடி உயர்ந்த மனிதனாக்கி விட்டது என்று தெரிவித்தார் . (6)

## நிலக் கண்ணிவெடிகளை அகற்ற புதிய தொழில்நுட்பம் கண்டுபிடிப்பு

நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதில் தற்போது கண்டறியப்பட்டுள்ள புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்தினால் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பாதுகாக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஹோலோகிரபிக் ராடர் முறை மூலம் நிலக்கண்ணிவெடிகளை மிக துல்லியமாக கண்டறிந்துவிட முடியும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

ஐ.நாவின் புள்ளிவிபரங்களின் படி உலகில் எண்பதுக்கும் அதிகமான நாடுகளில் புதைக்கப்பட்டுள்ள சுமார் 100 மில்லியன் வரையிலான நிலக்கண்ணிவெடிகளை கண்டறிந்து அவற்றை அகற்றும் முயற்சிகளில் மெட்டல் டிடெக்டர் எனப்படும் உலோ கங்களை கண்டறியும் கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன.

நிலக்கண்ணிவெடிகளில் சிக்கி ஒவ் வொரு மாதமும் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் ஒன்றில் கொல்லப்படுகின்றனர் அல்லது உடல் அவயங்களை இழந்து ஊனமடைகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

உலோகங்களை கண்டறியும் கருவிகள் பொதுவாக எந்தவொரு உலோகத் துண்டுகளையும் கண்டறியக்கூடியவை என்பதால் பாதிப்புகளை ஏற்படுத்தாத உலோகத்துண்டுகளை கண்டறிவதிலேயே சுமார் 90 வீதமான வளங்களையும் நேரத்தையும் பொதுவாக அவை வீணடித்து விடுகின்றன.

ஆனால் தற்போது லேசர் கதிர்களைப் பாய்த்து பொருளொன்றின் முப்பரிமான பிம்பத்தை கண்டிறியும் ஹோலோகிரபிக் ராடர் என்ற முறையை பயன்படுத்தி பிளாஸ்டிக் உள்ளிட்ட எந்தவகையான பொருட்களால் ஆன நிலக்கண்ணிவெடிகளையும் மிக இலகுவாக கண்டறிந்து விட முடியும் என சர்வதேச விஞ்ஞானிகள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

வழமையான ராடர் கருவிகள் நிலத்தினுள்ளே கதிரை அனுப்பி அது தரும் சமிக்ஞைகளை பெறுகின்றன.

ஆனால் பத்தாயிரம் யூரோக்கள் பெறுமதியான ராஸ்கான் ரக ராடர் கருவிகள் கதிர்களை தொடர்ச்சியாக அனுப்புவதன் மூலம் நிலத்தில் புதைந்துள்ள பொருட்களின் தெளிவான நிழற்படத்தை நாம் காண வகை செய்கின்றன.

பேராசிரியர் கொலின் வின்ட்ஸர் தனது ஓய்வு நேரத்தில் சுமார் 12 வருடகாலத்தை இந்த கருவியை கண்டுபிடிக்கும் முயற்சியில் செலவிட்டு வந்துள்ளார்.

இந்தக் கருவியுடன் ஏனைய தொழி நுட்பத்தையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் கண்ணிவெடி அகற்றும் பணியில் மனிதர் ஈடுபட தேவையில்லாத தானியங்கி முறையையும் கைக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## ஐ. தே. க தலைமைத்துவம் மாறாவிடின் கட்சி என்றும் எதிர்க்கட்சியாகவே இருக்கும் சாத்தியம்

## லக்ஸ்மன் செனவிரத்ன தெரிவிப்பு


(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி இலங்கை வரலாற்றில் உறுதியான அரசியல் கட்சியெனவும் அதனை வெற்றிப்பாதையில் இட்டுச்செல்லும் வகையில் அதன் தலைமைத்துவம் மாறாவிட்டால் கட்சி என்றும் எதிர்க்கட்சியாகவே இருக்குமென்றும் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய தலைமைத்துவம் கட்சிக்கு அவசியம் என சுட்டிக்காட்டிய அவர் 2017 இற்குப் பின்னரும் கட்சி எதிர்க்கட்சியாகவே இருக்க வேண்டிய அறிகுறிகளே தென்படுவதாகவும் எனவே கட்சியைக் காப்பாற்ற சகல ஐ.தே.க உறுப்பினர்களும் சிறிகொத்தவைச் சூழ்ந்து கொள்ளவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த ஒரு கட்சி மகாவலி, கல்லோயா போன்றபாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொண்ட ஒருகட்சி, ஜனசவியவை வழங்கிய ஒரு கட்சி இன்று வரலாறாகிப் போயுள்ளது என தெரி வித்த அவர், இன்னும் எவ்வளவு காலத்திற்கு எதிர்க் கட்சியாகவே இக்கட்சி இருக்கப் போகின்றதென்பதே தனது ஒரே கேள்வி என்று குறிப்பிட்டார். (6)

## ஈரானுக்கெதிராக புதிய தடைகளை விதிக்கும் ஆவணத்தில் ஒபாமா கைச்சாத்து



ஈரானுக்கு எதிராக புதிய தடைகளை விதிக்கும் ஆவணத்தில் அமெ ரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத் திட்டுள்ளார்.


இதற்கமைய ஈரா னுடன் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தண்டனை விதிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்தத் தடையின் மூலம் ஈரான் பொருளா தார நெருக்கடியை எதிர்நோக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

எவ்வாறெனினும் சமாதானமான நோக்கங்களுக்காக தாம் அணுசக்தியைப் பயன்படுத்தி வருவதாக ஈரான் அறிவித்துள்ளது. அணுவாயுத உற்பத்தியில் ஈடுபட்டால் எதிர்நோக்க நேரிடக் கூடிய விளைவுகள் குறித்து ஈரானுக்கு உணர்த்த வேண்டுமென அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளதுடன் ஈரானுக்கு எதிரான தடைகளும் அழுத்தங்களும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது.

ஈரான் அணுவாயுத உற்பத்திகளை மேற்கொள்வதனை தடுப்பதற்கு அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் தொடர்ச்சியாக போராடும் என பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அணுவாயுத உற்பத்தியை கைவிடுமாறு கோரி ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றதுடன் ஈரான் மீது நான்காம் கட்ட தடையை விதிக்குமாறு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை கடந்த வாரம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் வித்தியாலயத்திற்கு தொலைபேசி இணைப்பு ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவி திருமதி சியாமளா தியாகராசா தொலைபேசியை அதிபர் நா. நாகராசாவிடம் கையளிப்பதையும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

ஆசை - கண்ணைக் குருடாக்குகிறது
காதைச் செவிடாக்குகிறது. - இஸ்ரேல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் பிரேமதாசவும் போட்டியிடும் வாய்ப்பு

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையில் ஒருவர் இரண்டு தடவைகளுக்குமேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாதென்பது அரசியல் யாப்பின் எடுத்துரைப்பு.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜயவர்த்தனவிற்கும் இந்தச் சட்டம் எல்லையிட்டது.

இதன் காரணமாக ஜனாதிபதிப் பதவியில் இருந்தவர்கள் அந்தப் பதவியைவிட்டு வெளியேற விருப்பமின்றி வீடுபோய்ச் சேர்வது வழக்கம்.

இந்த ஜனாதிபதிப் பற்றிலிருந்து ஜே.ஆர்.ஜயவர்த்தன, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க என எவரும் விடுபட முடியவில்லை.

சந்திரிகா குமாரதுங்க அவர்கள் இரண்டு தடவை ஜனாதிபதியாக இருந்துவிட்டு பதவியிலிருந்து ஓய்வுபெறும்போது, என்னை ஜனாதிபதியென்று மக்கள் அழைக்கலாம். தேர்தலில் யார் வென்றாலும் நான்தான் ஜனாதிபதி என்று கூறினார்.

என்னசெய்வது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் யாப்பு அந்தப் பதவியில் இருப்பவர்களுக்கு நீங்கா இறுமாப்பைக் கொடுத்துவிடுகிறது. பரவாயில்லை போகட்டுமே என்று விட்டுவிட்டால்,

தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இது இரண்டாவது பதவிக்காலம்.

எனவே அவரும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. அவர் அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் அரசியல் யாப்பை மாற்றி அமைக்க வேண்டும்.

அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கு தேவையான மூன்றில் இரண்டு பலத்தை பாராளுமன்றத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழமைவு தற்போது இருப்பதனால்,

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை சீரமைத்து அந்தப் பதவிக்கு எத்தனை தடவையும் போட்டியிடலாம் என்ற யாப்புத்திருத்தத்தை கொண்டுவரலாம்.

அப்படி ஒரு திருத்தம் வருவதென்றால் அதில் மகிந்த ராஜபக்ஷ மட்டும் போட்டியிடுவது முடியாத காரியம்.

ஏனெனில் ஏற்கனவே இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவும் போட்டியிடத் தயாராகி விடுவார்.

சந்திரிகா மட்டுமா? காலஞ்சென்றவர்களான ஜே.ஆர்.ஜயவர்த்தன, ஆர்.பிரேமதாசா போன்றவர்களும் எழுந்துவந்து வேட்புமனுத் தாக்கல் செய்வர் என்ற பயம் இருக்கவே செய் கிறது.

இதைத் தடுக்க என்னசெய்யலாம்? யோசிப்பம். இறந்தவர்கள், விதவைகள். இவர்கள் போட்டியிட முடியாது என ஒரு சரத்தை எங்கோ ஒரு மூலையில் சேர்த்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

# இலங்கை நிலைமைகள் குறித்து இந்தியாவுக்குத் தவறான தகவல்

## அதிகாரிகள் பதவி இழப்பு

(டெல்லி)

இலங்கையின் அரசியல் நிலைமைகள் குறித்து இந்திய அரசாங்கத்திற்கு தவறான அறிக்கைகளை வழங்கிய இந்திய தூதரக அதிகாரிகள் பலர் அவர்கள் வகித்துவந்த பதவிகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளதாக இராஜதந்திரத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அதிகாரிகள் இந்திய வெளிவிவகார அமைச்சின் சவுத் புளொக்கில் பணியகத்தில் பணியாற்றி வந்துள்ளனர்.

கடந்த தேர்தல் காலத்தில் இருந்து இந்த அதிகாரிகள் இந்திய மத்திய அரசுக்கு வழங்கிய தகவல்கள் தவறாகியுள்ளதால் இந்திய அரசாங்கம் அதிருப்தியடைந்துள்ளது.

இலங்கை உள்நாட்டு அரசியல் நிலைமைகள், இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு நேரடிப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய வெளிநாடுகளுடன் கொண்டுள்ள தொடர்புகள் குறித்து அந்த அதிகாரிகள் சரியான தகவல்களை வழங்கவில்லை என கூறப்படுகிறது. (ந-5)

# அரசை விமர்சித்து கவிதை எழுதியவர் பதவி பறிபோகுமா?

(கொழும்பு)

அரசாங்கத்தை விமர்சித்து பத்திரிகைகளுக்குக் கவிதைகளை எழுதியதாக கூறப்படும் கடற்படைத் தலைமையகத்தின் சிவில் ஊழியர் ஒருவரை பணியில் இருந்து நீக்குவதற்காக கடற்படைத் தலைமையகம் பொதுநிர்வாக அமைச்சின் நிறுவனங்களுக்கான பணிப்பாளரின் ஆலோசனையை கோரியுள்ளது.

யுத்தம் முடிபடைந்து ஒருவருடப் பூர்த்தியைக் கொண்டாடும் வகையில் நடத்தப்பட்ட இராணுவத்தினருக்கான மரியாதையளிக்கும் வைபவம் மற்றும் யுத்தத்தை வழிநடத்திய ஜெனரல் சரத் பொன்சேகாவை சிறைவைத்திருப்பது குறித்து விமர்சிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட ஊழியர் கவிதையொன்றை எழுதியுள்ளதுடன் அந்த கவிதை கடந்த 24 ஆம் திகதி திவயின பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்துள்ள கடற்படை அதிகாரிகள் அரசாங்கத்தின் உத்தரவின்படி குறித்த ஊழியரை பணியில் இருந்து நீக்குவதற்கான சட்டதிட்டங்களை ஆராய்ந்து ஆலோசனை கூறுமாறு பொது நிர்வாக அமைச்சின் நிறுவனங்களுக்கான பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளன. (ந-5)

# யாழ்ப்பாண "மக்கள் பாராளுமன்ற" நிகழ்வில் கௌரவ மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு

நீதி நியாயத்திற்கான மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் யூலை மாத இறுதியில் நடத்தப்படவிருக்கும் மக்கள் பாராளுமன்றம் நிகழ்வில் பொதுமக்களின் சார்பில் கௌரவ மக்கள் பிரதிநிதிகளாகப் பங்குபற்றுமாறு அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கௌரவ மக்கள் பிரதிநிதி ஒருவருக்கு தம் சமூகத்தின் சார்பில் முரண்பாட்டுப் பிரேரணை ஒன்றை மக்கள் பாராளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும்.எனவே தங்கள் கிராமத்திலோ ,பிரதேசங்களிலோ , அமைப்புகளிலோ காணப்படும் மக்கள் சார்ந்த பிரச்சினையை ஒரு முறைப்பாட்டுப் பிரேரணையாக வரைந்து சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மக்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் முரண்பாட்டுப் பிரேரணையுடன் தொடர்பு பட்ட அரச அதிகாரிகளும் மக்கள் பாராளுமன்றத்திற்கு அழைக்கப்படவுள்ளதுடன், மக்களின் முன்னிலையில் அதற்கான பதில் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

பொது அமைப்புகளினதும், சமூக நிறுவனங்களினதும் பிரதிநிதிகள், அரசாங்க, தனியார் உத்தியோகத்தர்கள், உயர் கல்வி மாணவர்கள், சமூகத்தின் மூத்தோர்கள் ஆகியோரை கௌரவ மக்கள் பிரதிநிதிகளாகப் பங்குபற்றுமாறும் அழைப்பு விடுக்கிறோம்.

மக்கள் பாராளுமன்றத்திற்கு முறைப்பாட்டுப் பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்புவோர் தங்கள் பிரேரணைகளை **slsofj@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவோ, அல்லது மேலதிக தொடர்புகளுக்கு 0771520156 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

# அமைதிப்பணி

## பரமபிதா காட்டிய பாதை

செயலை முடிக்கும் வகையும்,வரக்கூடிய இடையூறும் முடிந்த போது கிடைக்கும் பெரும் பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

ஆம் எந்த ஒரு பணியைச் செய்யும் முன்பும் அப்பணியின் கால அளவு, நோக்கம்,அதில் வரும் சவால்கள், தடைகள் அதை எதிர்கொள்ளத் திட்டங்கள் என்று சிந்தித்து,பிறகு தான் செயலில் இறங்குகின்றோம்.


இன்று உலகமே அமைதியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. உலக நாடுகள் அமைதிப்பணியில் இறங்கியிருக்கின்றன.

இன்றைய நற்செய்தியில் அமைதிப்பணியைச் செய்வதற்காகத் தான் இயேசு தன் சீடர்களை அழைத்து இருவர் இருவராக அனுப்புகிறார். முதலாவது அமைதிப்பணியின் பின்னணி- அறுவடை மிகுதி வேலையாட்களோ குறைவு எனவே இறையாட்சி என்னும் அறுவடையை எடுக்கவேண்டும். அதற்காகத் தான் தம் சீடரை அனுப்புகிறார் .இந்த இறையாட்சியின் மையப்போதனை அமைதி.

இரண்டாவது அமைதிப்பணியிலே வரும் தடைகள்- அமைதிப்பணிக்கும் பல சோதனைகள்,இடர்கள், சவால்கள் வரும் என ஆண்டவர் கூறுகிறார். "புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடம் ஆட்டுக்குட்டியை அனுப்புவது போல அனுப்புகிறேன்"(லூக் 10:3) என்றார்.

மூன்றாவது பணிக்கான தயாரிப்பு - எந்தப் பணியைச் செய்யும் முன்பும் அதற்கான தயாரிப்பு இருக்க வேண்டும். அப்போது தான் நினைத்த செயல் வெற்றியாக முடியும். மலை ஏறுகின்றவன் கடும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் எந்தப் பளுவான சுமையையும் சுமந்து செல்ல அவனால் முடியும் என்றார்.

நான்காவது பணித்தளத்தில் -அமைதியை வீடு வீடாக அறிவிக்க வேண்டும். எந்த வீட்டுக்குச் சென்றாலும் அந்த வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். அப்போது தான் அறிவிக்கின்ற அமைதிப் பணியை செவ்வனவே செய்ய முடியும் என்கிறார்.



ஐந்தாவது அமைதிப் பணியின் மறுவடிவங்கள்- அமைதிப்பணியின் மறுவடி வங்கள் யாவை? அதையும் யேசுவே சுட்டிக் காட்டுகின்றார். ஒருவரின் உடல் ,மனநோய்கள் அவரின் அமைதியின்மையின் காரணங்களே எனவே பிணிகளைக் குணமாக்கும் செயலிலும் ஒருவருக்கு அமைதியை அளிக்கலாம். இயேசு தான் செய்த பல புதுமைகளில் பலருடைய உடல்நோய்களைக் குணமாக்கியது தான் அதிகமாகவுள் ளது.

ஆறாவதாகப் பணியின் தடைகளும் தண்டனைகளும்- யாரெல்லாம் அமைதிப்பணிக்கு தடைச்சுவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் அனைவரும் தண்டனைக்குட்பட்டவர்களே. அதேபோல இன்றைய நற்செய்தியிலும் அமைதிப் பணிக்கு தடையாய் இருக்கின்றவர்களுக்கு என்ன தண்டனை என்பதையும் தெளிவாகக் கூறுகிறார்.

"அந்த நாளிலே அவ்வூர் பெறும் தண்டனை சோதாம் நகரினர் பெறும் தண்டனையை விட கடினமாகவே இருக்கும் என உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். (10 :12)

ஏழாவது அமைதிப்பணியின் பலன் எந்தவொரு பணியைச் செய்தாலும் அந்தப் பணியின் பலன் தானாகவே வந்து சேரும் என்றார்.

ஆம், அமைதிப்பணிக்காக ஆயுதம் ஏந்த வேண்டியதில்லை, சிலுவையை ஏந்துவோம். உணர்ச்சி பொங்ககத்த வேண்டியது இல்லை. மாறாக உரையாடலில் ஈடுபடுவோம். அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே என்ற அசிசியின் வார்த்தைகளை வாழ்வாக்குவோம்.

*ஜோன் ரொபேர்ட்*



வட மாகாணத்தை கட்டியெழுப்பி மக்களின் வாழ்வாதாரத்தை
துரிதமாக மேம்படுத்திட யாழ்ப்பாணத்தில் இன்று உதயமாகும்
மத்திய வங்கியின் கிளையை வரவேற்று
சேவைகள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**

Natham Creation



# HEWOOD (ஹேவுட்)

மரத்தை ஒத்தது. அதிலும் சிறந்தது எனலாம்!

ஒரு அழகான இல்லம் / அலுவலகத்திற்கு

- பனலிங்
- ஸ்கேட்டிங்
- மோல்டிங்
- பீடிங்
- சீலிங்




- மரத்தைவிட மிக நேர்த்தியானது.
- வர்ணம் பூசுதல் அல்லது பளபளப்பாக்குதல் தேவையற்றது.
- வளையாது, சிராயாது, அல்லது கெட்டுப்போகாது
- பூச்சிகளால் பாதிப்புக்குள்ளாகாது.
- ஈரத்தை உறுஞ்சாததால், தண்ணீரிலிருந்து அது பாதுகாக்கப்படுகிறது.
- தலைமுறை தலைமுறையாக நிலை நிற்கும்,
- முழுமையாக பராமரிப்பற்றது.
- பலவித வர்ணங்களில் கிடைக்கும்.

**ஹேவாஸ் கிறாபிக்ஸ் (பிறை) லிமிட்டெட்**
223, ரீ.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10
தொ.பேசி: 2685271, 2685174, 2687132
பக்ஸ்: 2687133

**யாழ் நகரில் தொடர்புகளுக்கு**
Point Pedro Traders
0777 749497, 0777 667715, 021-2228881

**காட்சியறை:**
196 KKS Road, Jaffna.










Air Bike

OVER 50 YEARS SERVICE STILL IN LEAD

# CENTRAL CYCLE STORES



11 YEARS WARRANTY

காலங்கள் போனாலும் எமது தரமான உற்பத்தி மாறவில்லை. மற்றவர்களைப் போல் நாம் போலியானவற்றை வழங்கமாட்டோம். நவீன யுகத்தில் திறமையான தொழில் நுட்பங்களைக் கொண்டு உறுதியான சைக்கிள்களை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றோம்.

50 வருட சேவையில் உங்களுடன்

AIR BIKE
ATARI
KAMIKAZI
BICYCLES

SPARE PARTS AVILABLE ISLANDWIDE

CENTRAL CYCLE STORES
IMPORTERS & DISTRIBUTORS OF ALL MODELS OF BICYCLES & SPARES

#93, DAM STREET COLOMBO.12
SRI LANKA
TEL-(0094 11) 2338220, 2432183
2441597
FAX-(0094 11) 2338626
E-MAIL-cycle_20000@yahoo.com



# S.P.N. MOTORS



உங்களது நன்மதிப்புப் பெற்ற

Safari Motor Cycle
தற்போது விற்பனையில்

எஸ்.பி.என் மோட்டோர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# ஜேர்மனி அணி அசத்தல் வெற்றி ஆர்ஜென்டீனா வாங்கிக் கட்டியது

## ஏமாற்றத்துடன் விடை பெற்றார் மேசி

(கேப்டவுன்)

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டத்தில் ஜேர்மனி 4:0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரில் நேற்று கேப்டவுனில் நடந்த காலிறுதி ஆட்டத்தில் வலுவான ஜேர்மனி மற்றும் ஆர்ஜென்டீனா அணிகள் மோதின.

இரண்டாவது சுற்றில் ஜேர்மனி, இங்கிலாந்தை 4:1 என்ற கோல் கணக்கிலும் ஆர்ஜென்டீனா 3:1 என்ற கோல் கணக்கில் மெக்சிகோ அணியையும் தோற்கடித்து காலிறுதி போட்டிக்கு தகுதி பெற்றன.

ஆட்டம் ஆரம்பமாகி 3ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு ஒரு பிரீ கிக் கிடைத்தது. சுமார் 30 மீற்றர் தொலைவில் இருந்து பாஸ்டியன் ஸ்வாஸ்னெட்ஜிகர் அடித்தபந்து கோல் கம்பத்தை நோக்கி வந்தது. அதனை சமார்த்தியமாக தலையால் முட்டி கோலாக்கினார் தோமஸ் முல்லர். இந்த உலகக்கிண்ண தொடரில் தோமஸ் முல்லர் அடிக்கும் 4ஆவது கோல் இதுவாகும்.

பதிலடியாக ஆர்ஜென்டீனா வீரர்கள் கோல் இடிக்க போராடினார்கள். தொடர்ந்து 20ஆவது நிமிடத்தில் மேதி ஒரு அருமையான பாசை கார்லெஸ் டாவெசுக்கு கொடுத்தார். ஆனால் டாவெசை முந்திக் கொண்ட ஜேர்மனி கோல்காப்பாளர் நியூயார் அந்த பந்தை பிடித்துக் கொண்டார்.

இதனால் ஜேர்மனி கோல் வாங்காமல் தப்பித்தது. இதற்கு அடுத்த நிமிடத்தில் ஜேர்மனி வீரர் குளோசுக்கு ஒரு அருமையான வாய்ப்புக் கிடைத்தது தோமஸ் முல்லர் கொடுத்த பாசை வெளியே அடித்து அவர் வீணடித்தார். முதல் பாதி ஆட்டத்தில் ஜேர்மனி 1:0 என்று முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகியவுடனேயே ஆர்ஜென்டீனா தாக்குதல் ஆட்டத்தை தீவிரப்படுத்தியது. 48ஆவது நிமிடத்தில் ஏஞ்ல் டி மரியா அடித்த பந்து ஜேர்மன் கோல்கம்பத்தை விட்டு சற்று விலகி சென்றது. பிற்பாதி ஆட்டத்தில் பெரும்பாலும் ஆர்ஜென்டீனா வின் கட்டுப்பாட்டிலேயே பந்து இருந்தது. ஜேர்மனி கோல்கம்பத்தை பார்த்து வலுக் குறைந்த பல உதைகளை ஆர்ஜென்டீனா வீரர்கள் அடித்து வீணாக்கினர்.

தொடர்ந்து 68ஆவது நிமிடத்தில் ஜேர்மனி 2ஆவது கோல் போட்டு ஆர்ஜென்டீனாவுக்கு அதிர்ச்சி அளித்தது. அந்த அணியின் ஜெரோம் போடங் பபோஸ்கிக்கு கொடுத்த பாசை அவர் கடத்தி வந்து குளோசுக்கு வழங்க நிறுத்தி நிதானமாக கோலுக்குள் தள்ளி ஆர்ஜென்டீனாவை குளோஸ் செய்தார் குளோஸ். உலகக் கிண்ண போட்டியில் குளோஸ் அடிக்கும் 13 ஆவது கோல் இது.

புடோஸ்கி, குளோசுக்கு பந்தை கிராஸ் செய்த போது அதனை ஆர்ஜென்டீனா கோல் காப்பாளர் ரிவரோஸ் பிடித்திருக்கலாம் அவர் அதனை கோட்டை விட்டததால் கோலாக மாறியது.

தொடர்ந்து ஆர்ஜென்டீனாவின் தடுப்பாட்ட வீரர்கள்தற்காப்பு ஆட்டம் ஆடத் தொடங்கினார்கள். ஜேர்மனி வீரர்களை பிடித்து விளையாட ஆர்ஜென்டீனா வீரர்கள் தவறினர். இதனால் அடுத்த 5ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் பாஸ்டியன் ஸ்வாஸ்னெட்ஜிகர் கோல் கம்பம் வரை பந்தை கடத்தி வந்து பிரெட்ரிச்சுக்கு பாஸ் செய்தார். பிரெட்ரிச் மிக எளிதாக இதனை கோலாக மாற்றினார். இதன் மூலம் ஜேர்மனி 3:0 என்று முன்னிலை பெற்றது.

கடைசி வரை ஆர்ஜென்டீனாவை விரட்டி அடித்த ஜேர்மனி 89ஆவது நிமிடத்திலும் ஒரு கோல் அடித்தது. மிராஸ்லாவ் குளோஸ் தான் இந்த கோலையும் அடித்தார். உலகக் கிண்ண போட்டியில் குளோஸ் அடிக்கும் 14 ஆவது கோல் இது. இன்னமும் ஒருகோல் அடித்



தால் அவர் பிரேசில் வீரர் றொனல்டோ அடித்த 15 கோல் சாதனையை சமன் செய்யலாம்.

3 உலகக்கிண்ண தொடர்களில் விளையாடியுள்ள றொனால்டோ 15 கோல்கள் அடித்துள்ளார். இந்த உலகக் கிண்ணத் தொடரில் அந்த சாதனையை முறியடிக்க குளோசுக்கு வாய்ப்பு காத்திருக்கிறது.

ஆட்டநேர இறுதி வரை ஆர்ஜென்டினாவால் பதிலுக்கு ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இறுதியில் ஜேர்மனி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பார்சிலோனா அணிக்காக கடந்த சீசனில் மட்டும் 47 கோல்களை அடித்த ஆர்ஜென்டீனாவின் இளம் வீரர் மேசி இந்த உலககிண்ண தொடரில் ஒரு கோல் கூட அடிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

# 'பெனால்டி ஷுட் அவுட்டில்' கானா தோல்வி; அரையிறுதிக்கு முன்னேறியது உருகுவே அணி

(ஜோகனஸ்பேர்க்)

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரின் அரையிறுதிக்கு உருகுவே அணி முன்னேறியது. நேற்று முந்தினம் நடந்த காலிறுதியில் உருகுவே அணி கானா அணியை பெனால்டி ஷுட் அவுட்டில் வீழ்த்தியது.

கடைசி வரைபோராடிய கானா அணிக்கு பெனால்டி கிக் வாய்ப்பை வீணடித்த ஜியான் வில்லனாக மாற தொடரில் இருந்து பரிதாபமாக வெளியேறியது.

தென்னாபிரிக்காவில் 19ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடர் நடக்கிறது. இதன் இரண்டாவது காலிறுதிப்போட்டியில் உருகுவே, கானா அணிகள் மோதின.

போட்டி ஆரம்பமாகியது முதல் இரு அணியினரும் முன்னிலைபெற பேராடினர். உருகுவே அணிக்கு அடுத்தடுத்து கோணர்கிக் வாய்ப்புகள் கிடைத்தது. இருப்பினும் இதை வீணடித்தனர்.

போட்டியின் 29ஆவது மற்றும் 31ஆவது நிமிடத்தில் கானா அணிக்கு சிறப்பான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இதை வோர்ஷா, ஜியான் ஆகியோர் கோல் கம்பத்துக்கு வெளியே அடித்து ஏமாற்றினர்.

ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் கானாவின் முன்ட்டாரி, கோல் அடிக்கும் வாய்ப்பை கோட்டை விட்டார்.

இப்படித் தொடர்ந்து நடத்தியத் தாக்குதலுக்கு கடைசியில் பலன் கிடைத்தது. முதல் பாதியின் ஸ்றொப்பேஜ் நேரத்தில் (47 ஆவது நிமிடம்) கானாவின் முன்ட்டாரி 27 மீற்றர் தொலைவில் அசத்தல் கோல் அடித்தார். இதையடுத்து முதல் பாதியில் கானா அணி 1:0 என முன்னிலை பெற்றது.

### உருகுவே பதிலடி

இரண்டாவது பாதியில் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்ட உருகுவே அணிக்கு 55ஆவது நிமிடத்தில் பிரிகிக் வாய்ப்பு கிடைத்தது. இதை அணியின் நட்சத்திர வீரர் போர்லன் கோல் கம்பத்தை நோக்கி அடிக்க அது அசத்தலான கோலாக மாறியது.

இதையடுத்து ஆட்டம் 1:1 என சமனானது. 63ஆவது நிமிடத்தில் கிடைத்த மற்றொரு வாய்ப்பை உருகுவேயின் சுவாரெஜ் வீணாக்கினார். இறுதியில் இரு அணியினர் மேலும் கோல் எதுவும் அடிக்காத நிலையில் 1:1 என போட்டி சமனானது.

### கூடுதல் நேரம்

இதையடுத்து போட்டி கூடுதல் நேரத்துக்கு சென்றது. முதல் பாதியில் இரு அணியினரும் கோல் அடிக்கவில்லை. இருப்பினும் கானா அணியினர் தொடர்ந்து உருகுவே கோல் பகுதிக்குள் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தினர்.

### யார் வில்லன்?

போட்டியின் ஸ்றொப்பேஜ் (122ஆவது நிமிடம்) கானா அணியினர் அடித்த பந்தை கோல் எல்லையில் வைத்து கையால் வைத்து உருகுவே அணிக்கு வில்லனாக மாறினார் முன்னணி வீரர் சுவாரெஜ்.

இதையடுத்து உடனடியாக நடுவரால் சிவப்பு அட்டைகாட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இவர் செய்த தவறு காரணமாக கானாவுக்கு பெனால்டி கிக் வாய்ப்பு கிடைத்தது.

இதில் கோல் அடித்து அணியை அரையிறுதிக்கு கொண்டுசெல்லலாம் என்ற கனவுடன் வந்தார் ஜியான்.

ஆனால் பந்தை கோல் கம்பத்தின் மேல் அடித்து வில்லனாக மாறினார். கூடுதல் நேரத்திலும் ஆட்டம் 1:1 என சமமாக இருந்தது.

### கானா தோல்வி

இதையடுத்து பெனால்டி ஷுட் அவுட் முறையில் போட்டியின் முடிபு தீர்மானிக்கப்பட்டது.

- முதல் வாய்ப்பில் போர்லன் (உருகுவே), ஜியான் (கானா) கோல் அடித்தனர்.
- இரண்டாவது வாய்ப்பில் விக்டோரினோ (உருகுவே), அப்பியா (கானா) என இருவரும் கோல் அடிக்க ஆட்டம் 2:2 என சமநிலை எட்டியது.
- மூன்றாவது வாய்ப்பில் கனாவின் மென்ஷா பந்தை கோல் காப்பாளரிடம் அடித்து வாய்ப்பை வீணாக்கினார். ஆனால் ஸ்காட்டி (உருகுவே) தன் பங்கிற்கு கோல் அடிக்க உருகுவே 3:2 என முன்னிலை பெற்றது.
- நான்காவது வாய்ப்பை உருகுவேயின் பேரரா கோல் கம்பத்துக்கு மேலாக அடித்து ஏமாற்றினார். மீண்டும் ஆட்டம் சமன்செய்ய காணாவுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அடியாவும் (கானா) கோல் காப்பாளரிடம் அடித்து கோட்டைவிட கானாவின் தோல்வி உறுதியானது (3:2).
- ஐந்தாவது வாய்ப்பில் தந்திரமாக செயல்



பட்ட அப்ரியூ (உருகுவே) பந்தை மெதுவாக கோல் போஸ்ட்டைநோக்கி அடித்து கோலாக மாற்றினார். (4:2) இதையடுத்து பெனால்டி ஷுட் அவுட் முறையில் 5:3 என வென்ற உருகுவே அணி ஐந்தாவது முறையாக அரையிறுதிக்கு முன்னேறி அசத்தியது.





உலகக் கிண்ண கால்பந்தாட்டம்-2010
சம்பியனாகும் நாடு? ..................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 09.07.2010 இற்கு முன்னர் அனுப்புவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் 10 வெற்றியாளர்களுக்கு டயலொக் நிறுவனத்தின் அழகிய Boot Bag பரிசாக வழங்கப்படும்.

பெயர் : ..................

முகவரி : ..................

..................

தொலைபேசி : ..................

தே.அ.அ. இல. : ..................

விளம்பரப் பகுதி,
வலம்புரி,
இல.3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி
Dialog

# அபாயத்தைக் கடந்து வரும் இலங்கை அகதிகளை மீண்டும் அபாயத்திற்குள் தள்ளுவது நியாயமில்லை

## அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ஜீலியா கருத்து



(கொழும்பு)

இலங்கை போன்ற நாடுகளில் இருந்து தப்பி, பாரிய அபாயகரமான பயணத்தின் பின்னர் அவுஸ்திரேலியா வரும் அவர்களை மீண்டும் அதே அபாயத்திற்குள் தள்ளுவது நியாயமில்லை என அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ஜீலியா கில்லாட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை அகதிகள் தொடர்பிலான தீர்வொன்றை முன்வைக்குமாறு அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் ஜீலியா அந்நாட்டு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் வெளியிட்டுள்ள விமர்சனங்கள் குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அகதிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காமல் எதிர்ப்புத் தெரிவித்து சுலோகங்களைத் தூக்குவது ஏற்புடையதல்ல. இது எதிர்க்கட்சிகள் தமது அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளே தவிர உண்மையான கரிசனைக்கானது இல்லை.

எவ்வாறாயினும் பசுபிக் கொள்கை அடிப்படையில் அகதிகள் தொடர்பான தீர்வினை முன்வைக்க விரும்புகின்றோம்.

இதற்கிடையில் பசுபிக் கொள்கை அடிப்படையில் அவுஸ்திரேலியாவுக்குள் வரும் அகதிப் படகுகள் மீண்டும் திருப்பியனுப்பப்படுமா? என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதில் வழங்கிய அவர், பாரிய அபாயகரமான பயணத்தின் பின்னர் அவுஸ்திரேலியா வரும் அவர்களை மீண்டும் அதே அபாயத்திற்குள் தள்ளுவது நியாயமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கை போன்ற நாடுகளில் இருந்து அபாயகரமான முறையில் அவுஸ்திரேலியா வருகின்றவர்கள் தொடர்பில் கரிசனை காட்ட முனைவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-3,5)

## பான் கீ மூனுக்கு எதிராக வீட்டோவை பயன்படுத்துக

### ஹெலஉறுமய கோருகின்றது

(கொழும்பு)

இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடும் நோக்கில் நிபுணர்கள் குழுவை நியமித்துள்ள ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இரண்டாவது முறையாகச் செயலாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதைத் தடுக்க வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு ஜாதிக ஹெலஉறுமய சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிடம் கோரிக்கை விடுக்கத் தீர்மானித்துள்ளது.

பான் கீ மூனின் பதவிக் காலம் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிபடையவுள்ளது.

அவரை 2-வது முறையாகவும் பதவி அமர்த்த வீட்டோ அதிகாரம் உள்ள நாடுகளின் ஆதரவைப் பெற வேண்டும். இந்த நிலையில் கொழும்பில் உள்ள சீன மற்றும் ரஷ்யத் தூதரகங்களுக்குப் பேரணியாகச் சென்று பான் கீ முனை 2-வது தடவையாக ஐ.நா. செயலாளர் பதவியில் அமர்த்த ஆதரவு வழங்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கப் போவதாக ஜாதிக ஹெலஉறுமயவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ந-5)

## சந்திரிகாவை எம்.பியாக்க மங்கள சமரவீர முயற்சி

ஜனாதிபதியாக ஒருவர் இரண்டு வருடங்களுக்கு மேல் பதவி வகிக்கும் வகையில் அரசாங்கம் திருத்தங்களை மேற்கொண்டால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தேசியப் பட்டியல் வழியாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பது குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் சிலருடன் இரகசியமான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா மீண்டும் அரசியலில் பிரவேசித்தால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பில் அதிருப்தியடைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரில் அதிகளவானோரே எதிர்க்கட்சியின் பொதுக் கூட்டணியுடன் இணைக்கலாம் என மங்கள சமரவீர கருதுகிறார். (ந-5)

ஃபமிலி சுப்பர் ஸ்பொட்

சந்தை அருகாமை, மானிப்பாய்

T.P.:- 021 5100169 / 021 7900388

BAHIRA

கோழி இறைச்சி :- 1Kg- 350/=

பன்றி இறைச்சி :- 1Kg- 490/=

பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபாய் 350/= பெறுமதியான கைப்பை இலவசம்.

(C-545)

## இலங்கை...

சவின் கூற்றுத் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஏதேனும் விளக்கங் களையோ அல்லது மன்னிப்பையோ கோரு மா? என பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் கருத்து தனிப்பட்ட கருத்து எனவும், அது அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## சாள்ஸ்...

செய்யப்பட்டதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

காவல்துறை அதிகாரி சாள்ஸ் விஜயவர்த்தனவின் கொலையில் குறித்த நபர் சம்பந்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ந-5)

## கடற்படை...

மேற்படி விடயம் குறித்து தான் எதனையும் அறியவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ந-5)

## வ.செ.திட்ட...

செலவுத் திட்டத்திற்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமளிதுமளியை அடுத்து வாக்கெடுப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டன.

இதேவேளை நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கருத்துரைத்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட 3 ஆம் தவணைக் கடன் தொகை, அமெரிக்காவின் 3 வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் இந்தத் தொகைக்கு 3.5 சதவீதம் வட்டி கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ந-5)

## இனப்பிரச்சினைத் தீர்வு...

இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பார்வை மாத்திரம் இன்றி, ஏனைய முஸ்லிம் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளையும் அழைத்து இது குறித்து இந்தியா பேசவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதன் பின்னரே தீர்வு யோசனைக்கான இணக்கப்பாடு எட்டப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி பேசுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அண்மையில் டக்ளஸ் தேவானந்தா கூட்டிய தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் புறக்கணித்தமைக்கு அரசின் சூழ்ச்சி என கருதியதாலோ அல்லது ஏனைய கட்சிகளிடம் நம்பிக்கையில்லாமையோ அல்லது இந்தியாவுடன் இணைந்த தீர்வுத் திட்டத்தில் பிற கட்சிகளின் தலையீட்டை விரும்பாமையோ காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. (ந-5)

## கே.பியை...

இராணுவ வீரர்கள் சிறைக் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் கே.பி. வடக்கில் சுற்றுலா செய்கின்றார். அவரது கணக்கில் பில்லியன் டொலர்கள் இருக்கின்றன. வடக்கில் மாவட்டச் செயலாளர்களை அழைத்து அவர் கூட்டங்களை நடத்துகின்றார்.

கே.பியை வட மாகாணத்தின் முதலமைச்சராக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று சரத் பொன்சேகா கூறினார். (ந-5)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சண்முகநாதன்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் அதேயிடத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகநாதன் 03.07.2010 நேற்றுச் சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கராணியின் அன்புக் கணவரும், குமார், பிரேமிளா, பிரேமதாஸ், சத்தியநாதன், சுரேஷ் குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவருகடையடி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.
021 321 1165

தகவல்:
குடும்பத்தினர்

(1606)

## ஐ.நா.நிபுணர் குழு நியமனம்...

இலங்கையில் போர் நடைபெற்றபோது இந்தியாவின் சில அதிகாரிகள் மற்றும் உயர் அரசியல் பதவிகளை வகிப்போரும் இலங்கையில் நடவடிக்கைகள் தொடர்பாக செயற்பட்ட விதம் குறித்து ஐ.நா. நிபுணர்கள் குழுகேட்டறிய எண்ணியுள்ளதாக ராஜதந்திர தரப்பினர் அறிவித்ததையடுத்து இந்தியா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பில் விரிவாக ஆராய்ந்த இந்திய அதிகாரிகள் நிபுணர்கள் குழுவின் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இந்தியா தனது எதிர்ப்பை ராஜதந்திர ரீதியாக ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழுவிற்கு அடுத்த சில தினங்களில் அறிவிக்கவுள்ளதாகப் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

பணியாளர் தேவை

அழகுக் கலை நிலையத்தில் (Beauty Clinic) பணியாற்றுவதற்கு அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை.



தொடர்புகளுக்கு:-

கூர்மை மல்ரி விஷன்

இல.325, பலாலி வீதி,

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

(1805)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.